
# தொண்டன்

ISSN: 2012 - 6352
Reg. No.: 187317
நவம்பர் - 2018
சமய – சமூக – இலக்கிய வெளியீடு
ஆரம்பம் 1969 பெப்ரவரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் – 2018

மலர் - 50 இதழ் - 10


✤ ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

✤ துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்



✤ வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 01 |
| அனைத்து ஆன்மாக்மகள் | 02 |
| குறுங்கதை | 04 |
| நாங்கள் மட்டும் | 05 |
| மாணவர் பக்கம் | 06 |
| எண்ணிப்பார்க்கையில் | 07 |
| உலகில் இன்னும் அழுகாமல் | 08 |
| கல்லறை விழா | 09 |
| மரியாதை இராமன் | 10 |
| சின்ன விசயங்கள் சிறந்த | 12 |
| அன்பின் அரசி அன்னை | 13 |
| மருத்துவம் | 14 |
| எது நிரந்தரம் | 15 |
| நிலையான செல்வத்தை | 16 |
| இதுதான்டா அரசியல் | 18 |
| அக்கினி யாத்திரை | 19 |
| மகிழ்ச்சி என்பது | 20 |
| கை கோர்த்திடும் கார்த்திகை | 21 |
| வாழ்க்கைப் பாடம் | 22 |
| கடுகுக் கதை | 23 |
| இலக்கிய மஞ்சரி | 24 |
| வினாவிடைப் போட்டி | 26 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| அறிவை வளர்ப்போம் | 28 |


✱ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்) ✱


SOCIAL COMMUNICATIONS CENTRE
**P.O. BOX - 44**
**BATTICALOA.**
**TEL : 065 2226486**
**E-MAIL : battiscc@gmail.com**



விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

**"மண்ணின் மீது மனிதனுக்காசை**
**மனிதன் மீது மண்ணுக்காசை**
**மண்தான் கடைசியில் ஜெயிக்கிறது...."**




**ஒரு கற்பனை நிகழ்வு....**

கடவுள் ஒருநாள் கழுதையைப் படைத்து, "நீ ஒரு கழுதை. காலையும் மாலையும் உழைக்க வேண்டும். உன் மேல் சுமைகள் இருக்கும். அவ்வளவுக்கு அறிவு இருக்காது. நீ ஐம்பது வருடங்களுக்கு வாழ்வாய்" என்றார். இதற்கு கழுதை, "நான் கழுதையாக இருக்கிறேன். ஆனால், இருபது வருடங்கள் போதும்" என்றது. கடவுள் கழுதையின் ஆசையை நிறைவேற்றினார்.

அடுத்து, ஒரு நாயைப் படைத்து, "நீ மனிதனின் வீட்டைக் காக்கும் காவலன். அவனின் அன்புத் தோழனாக இருப்பாய். அவன் உண்டபிறகு உனக்குக் கொடுப்பான். நீ முப்பது வருடங்களுக்கு வாழ்வாய்" என்றார். அதற்கு நாய், "கடவுளே முப்பது அதிகம். எனக்கு 15 வருடங்கள் போதும்" என்றது. கடவுள் நாயின் ஆசையை நிறைவேற்றினார்.

அடுத்து, ஒரு குரங்கைப் படைத்து, "நீ ஒரு குரங்கு. மரத்திற்கு மரம் தாவ வேண்டும். நீ வித்தைகள் காட்டி மற்றவர்களை மகிழ்விக்க வேண்டும். நீ 20 வருடங்களுக்கு வாழ்வாய்" என்றார். இதற்கு குரங்கு, "20 வருடம் அதிகம் 10 வருடங்கள் போதும்" என்றது. கடவுள் குரங்கின் ஆசையை நிறைவேற்றினார்.

கடைசியாக, மனிதனைப் படைத்துச் சொன்னார், "நீ மனிதன். உலகில் உள்ள ஆறறிவு ஜீவன் நீ மட்டுமே. உன் அறிவைக் கொண்டு மற்ற மிருகங்களை நீ ஆட்சி செய்வாய். உலகம் முழுவதும் உன் கையில். நீ 20 வருடங்கள் வாழ்வாய்" என்றார். இதற்கு மனிதன், "இது மிகவும் குறைவு. கழுதை வேண்டாம் என்ற 30 வருடங்களையும், நாய் வேண்டாம் என்ற 15 வருடங்களையும், குரங்கு வேண்டாம் என்ற 10 வருடங்களையும் எனக்குக் கொடுத்துவிடு" என்று கேட்டான். கடவுள் மனிதனின் ஆசையையும் நிறைவேற்றினார்.

அன்று முதல் மனிதன் முதல் இருபது வருடங்களை மனிதனாகச் சந்தோஷமாக வாழ்கிறான். திருமணம் செய்து அடுத்த 30 வருடங்களையும் கழுதைபோல் எல்லாச் சுமைகளையும் தாங்கிக்கொண்டு அல்லும் பகலும் உழைக்கிறான். குழந்தைகள் வளர்ந்த பிறகு அடுத்த 15 வருடங்களுக்கு வீட்டின் நாயாக இருந்து அனைவரையும் பாதுகாத்துக் கொள்கிறான். மிச்ச மீதியைச் சாப்பிடுகிறான். வயதாகிய பிறகு குரங்கு போல் 10 வருடங்களுக்கு மகன் வீட்டில் இருந்து மகள் வீட்டிற்கு மாறி மாறித் தாவி தன் பேரக்குழந்தைகளுக்கு வித்தைகள் காட்டி மகிழ்விக்கின்றான்.

இதுதான் மனித வாழ்க்கையின் உண்மை. நிச்சயமாக எல்லா மனிதர்களும் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்ப்போம். எல்லோருக்கும் இந்த நிலை நிச்சயம் வரும் என உணர்வோம்.

ஆசைகளுக்கு இடம்கொடாமல், வயது முதிர்ந்த பெற்றோரை நேசிப்போம்.
இறக்கும் வரை மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுவோம்.

– ஆசிரியர் –

இறைவன் உங்களை ஆசிர்வதிப்பாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை
ஆயர்- மட்டக்களப்பு மறைமாவட்டம்.

# அனைத்து ஆன்மாக்கள் திருநாள்

நவம்பர் 1ம் திகதி தாய்த் திருச்சபை அனைத்துப் புனிதர்களின் திருநாளைக் கொண்டாடுகின்றது. அதனைத் தொடர்ந்து நவம்பர் 2ல் அனைத்து ஆன்மாக்கள் திருநாளைக் கொண்டாடுகின்றது. நம் அன்னையாகிய திருச்சபை மோட்சத்திலிருக்கும் தன் மக்களை நினைத்தபின், உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் தன் ஆன்மாக்களை இன்று நினைவு கூர்கின்றது. அவர்களுக்காகச் செபிக்கிறது. அவர்களுக்கு தன்னாலான உதவி செய்ய முயற்சிக்கிறது. மோட்சத்தில் வாழும் தன் மக்களுடன் அவர்களைச் சீக்கிரம் ஒன்றிக்கும்படி ஆண்டவரிடம் மன்றாடுகின்றது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

என்று இரத்தினச் சுருக்கமாக வள்ளுவர் இவ்வுலக வாழ்வின் நிலையாமையைப் பற்றிக் கூறுகின்றார். அதாவது நேற்றிருந்தவன் இன்றில்லை என்று கூறும் நிலையைக் கொண்டது இவ்வுலகு. "நாம் பிறப்பதே இறப்பதற்குத்தான்" என்று சொல்கிறார் தத்துவஞானி மார்டின் ஹைடகர். இவ்வுலக வாழ்வு என்பது நிலையற்றது என்று கிறிஸ்தவம் கூறுகிறது. எனவேதான் மனித வாழ்வு ஒரு பயணத்திற்கு ஒப்பிடப்படுகிறது. இறைவனிடமிருந்து வந்த ஓர் ஆன்மா மீண்டும் இறைவனை அடைய வேண்டும். இறைவனை நோக்கிய அதன் பாதையே மனிதனது ஆன்மீகப் பயணமாகும். அது கருவறையில் தொடங்கி கல்லறையில் முடிவடையும் பயணம். பிறப்பினில் தொடங்கி இறப்பினில் முடிவடையும் பயணம்.

மனிதர்களாய்ப் பிறந்த நாம் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறோம். மரணம் நம் வாழ்வில் நிகழக்கூடாது என்று எண்ணுகிறோம். ஆனால், மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஒருநாள் இறக்க வேண்டும் என்பது இயற்கையின் நியதி. உடலிலிருந்து ஆவி பிரிவது உண்மையான மரணம் அல்ல. மரணத்தை நாம் இரண்டு நிலைகளில் பார்க்கலாம். முதலாவது உடல் மரணம் *(PHYSICAL DEATH)*. இந்த உடல் மரணம் என்பது உடலிலிருந்து உயிர் பிரிந்து செல்வது. இது இயற்கையானது. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்த உடல் மரணத்தை அடைந்தே தீர வேண்டும். ஆதலால்தான் மனு உருவான நம் ஆண்டவர் இயேசுவும் இந்த உடல் மரணத்தை ஏற்க வேண்டியதாயிற்று.

இரண்டாவது, ஆன்மாவின் மரணம் *(SPIRITUAL DEATH)*. இதை 'நித்திய மரணம்' என்று திருச்சபை எடுத்துச் சொல்கிறது. அதாவது, உடல் மரணத்திற்குப் பிறகு நம்முடைய ஆன்மா கடவுளிடம் செல்லாமல் நரகத்துக்குச் செல்வதுதான் நித்திய மரணம் என்னும் ஆன்மாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம். வேறொரு வகையில் சொல்லப் புகுந்தால், நித்திய மரணம் என்பது கடவுள் அண்மையில் இருப்பதை, அவரது உடனிருப்பை உணராமல் இருப்பது. அவர்களுக்கு கடவுள் வெகு தொலைவில் இருக்கிறார்.

நாம் இந்த உடல் மரணத்தைக் குறித்து அச்சப்படத் தேவையில்லை. ஆனால், நித்திய மரணம் என்னும் ஆன்மாவின் மரணத்தைக் குறித்துக் கவலைப்பட வேண்டும். கடவுள் நமக் குக் கொடுத்திருக்கும் ஆன்மாவை இவ்வுலக வாழ்வில் பத்திரமாய் பாதுகாத்து, அதை மீண்டும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

எனவே, இறப்போடு வாழ்வு முடிந்து விடு கிறது என்று எண்ணி மிகுந்த வேதனைப்படுவதை, கவலைப்படுவதை, கண்ணீர் வடிப்பதை விட்டு விட்டு, நம்முடைய ஆன்மாவை எப்போதும் பரிசுத்தமாய் வைத்திருக்க முயற்சி செய்வோம்.

இயேசு தம்மைச் சாவுக்கு உட்படுத்தியதால் அதை அவர் அழிக்கவில்லை. மாறாக மாற்றி யுள்ளார். ஆகவே, நம் சாவு அர்த்தம் பெற வேண்டுமென்றால், அதை மகிழ்ச்சியோடு ஏற்க வேண்டும். அதற்கு இயேசுவில் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஏனென்றால், "என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25) என்று இயேசு கூறியுள்ளார்.

"இலையுதிர் காலம் என்பது மரணமல்ல
இன்னொரு துளிர்ப்புக்கான தொடக்கம்!
அஸ்தமனம் என்பது மறைவு அல்ல
இன்னொரு உதயத்திற்கான பதுக்கம்!

கிறிஸ்தவ விசுவாசம் இதுதான்! மனித வாழ்வில் இறப்பு இவ்வுலக வாழ்வின் முடிவு, நிலை வாழ்வின் தொடக்கம். "நாம் இவ்வுலகில் இறக்கும்போது வாழ்வு மாறுபடுகிறதே அன்றி முடிவதில்லை" என்பது புனித பவுலின் விசுவாசக் கூற்று. பிறப்பு, இறப்பு ஆகிய தத்துவங்களை ஆராய்ந்து அறவாழ்க்கை வழியை மேற்கொண்ட மேலோர்களின் பெருமை யால்தான் உலகம் ஞானப்புகழ் அடைந்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட வயதைக் கடந்த முதியோரி டம் நாம் நலம் விசாரிக்கும்போது மேலே கையைக் காட்டி, "இனி என்ன? அவன் அழைக்க வேண்டும்" என்பர். அந்த அழைப்பு சாதாரணமானது அல்ல! ஒவ்வொருவர் இறப்பும் உயிரோடு இருப்பவர்களுக்கு விட்டுச் செல்லும் செய்தி ஒன்று உண்டு: "இன்று நான், நாளை நீ. உன்னைக் காத்துக்கொள்ள நீ என்ன செய்திருக்கின்றாய்?" என்பதே அது.

இத்தனை வயது வரை வாழ்ந்திருக்கின்றான். பிறருக்கு என்ன செய்துள்ளான் என உலகத்தார் விமர்சிக்கும்படி வாழ்ந்திருக்கின்றோமா? நாம் விட்டுச் செல்லும் நமது அடையாளம் என்ன? மேலுலகக் கணக்கில் நமக்கான பதிவு என்ன வாக இருக்கும்? இவற்றைச் சிந்தித்தால் யார் மீதும் நமக்கு ஆத்திரமோ, வருத்தமோ, எரிச் சலோ தோன்றாது.

முதுமையில் இருப்பவர்களுக்கு இதன் முழு அர்த்தமும், அதன் தாக்கமும் நன்கு புரியும். மனிதனின் இறுதிக்கட்ட வாழ்வு சாதாரண மானதல்ல. இவ்வுலகில் பிறக்கும்போது ஒருவர் எதையும் கொண்டு வருவதில்லை. இங்கிருந்து புறப்படும்போதும் மனிதன் எதையும் எடுத்துச் செல்ல முடிவதுமில்லை. யாரையும் நம்மோடு துணைக்கு அழைத்துச் செல்லவும் முடியாது. அப்படி இருந்தும், இவை அனைத்தும் தெரிந்தும் ஒவ்வொன்றின் மீதும், ஒவ்வொருவர் மீதும் இவ்வளவு அதிக பற்றும், பாசமும் எப்படி வந்தது?

ஆனால், இவ்வுலகில் வாழும்போது பொருள், பொன், மண், பிள்ளைகள், சுற்றத் தார், நண்பர்கள் எனப் பலவற்றில் நமது ஈர்ப்பு இருக்கும். ஒவ்வொன்றையும் அனுபவிக் கவும் செய்வோம். ஒவ்வொரு செல்வத் தையும், கொடையையும், தாலந்தையும் எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதற்கு நிபந்த னைகள் உள்ளன. அவற்றுக்கான பதிவுக ளும் உள்ளன. முதுமை நெருங்கி வர இவை ஒவ்வொன்றிலிருந்தும் படிப்படியாக விடுபட வேண்டும். அப்போதுதான் நமக்கான பதி வேட்டில் பாவத்துக்கான பதிவுகள் குறைய ஆரம்பிக்கும்.

இவற்றின் மீதான பற்றுக்களை இறுகப் பிடித்தபடியே நமது முதுமையிலும் நமது

தொடர்ச்சி 25ம் பக்கம் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி யுத்தத்தின் ஓரங்கமான மாத்தளனில் யுத்தம் ஆரம்பித்த அதேவேளை மயூரன் எப்படியோ உயிர் தப்பி வெளியே வந்துவிட்டான். எல்லோருக்கும் இந்த அதிர்ஷ்டம் கிடைப்பதில்லையே....

யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருக்கையில் அனைத்துப் போர்வீரர்களையும் தாண்டி எப்படியோ அவன் உயிர்தப்பி வந்த ஆச்சரியம் இன்னும் என் கண்முன் நிழல்போல ஊசலாடுதே ...

சாதாரண ஒரு புளுகனாக அவனும் இருந்திருந்தால், நானும் அவனை நம்பியிருக்கமாட்டேன் தான். ஆனால், அவனைப்பற்றி ஆரம்பமுதலே அறிந்தவனாயிற்றே நான்... அதனால் நம்பித்தானேயாக வேண்டும்?!

எனது பெற்றோரும் இவனைப்பற்றி நன்கே அறிந்திருந்தார்கள். கிழிந்த ஷேர்ட்டும், தலைமுடி கலைந்தும் ஒரு விசரனைப்போல்தான் அவன் அப்போது தோற்றமளித்தான். அதுவும் அவனைப்பற்றிய மேலதிக தகவலுக்குப் பெரிதும் உதவியது. நாங்கள்





--விக்கேயெம்

கண்ட கோலத்தில் – அதாவது அவன் யுத்த களத்திலிருந்து திரும்பிவந்த சமயத்தில் அவனால் இயல்பாகக் கதைக்கக்கூட முடியவில்லை. பேசும்போது சற்றுக் கொன்னை தட்டியது. இயல்பு நிலைக்குத் திரும்பிவர சில காலம் எட்டியது, கடந்தது.

யுத்தத்தின் அகோரம், அவன் கோலத்தைப் பார்த்த மாத்திரத்தே அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

முன்னொரு சமயம் காண்டீபனும் இத்தகைய தொரு நிலையில் வந்திருந்தமை என் நெஞ்சில் நிழலாடியது. அவனும் இயல்பாகவே பயந்த சுபாவ முடையவன். அதற்குப் பின் அவன் அரச வேலை யையும் உதறிவிட்டு வந்திருந்தான். வெளிநாட் டுக்குப் போகவும் முயற்சிக்கவில்லை.

தனக்குக் கைவந்த கலைகளான வயறிங், கொம்பியூட்டர், தொலைகாட்சி, வானொலி எனத் திருத்திக் கொடுத்துச் சம்பாதித்து வந்தான்.

முன்பெல்லாம் விடுமுறை நாட்களில் செய்யும் வேலைகளை இப்போது அக்கறையுடன் முழுமையாகச் செய்து, அப்போதையை விட, இப்போது மேலதிகமாகச் சம்பாதித்தான். இதனால் வாடிக்கையாளருக்கும் திருப்தியாயிருந்தது. எங்களை உயிரோடு கொன்று சமாதிகட்ட நினைப்ப வனிடம் போய்ப் பல்லைக்காட்டி உழைப்பதா?

தான் வெள்ளைத்தோல் போர்த்த வெள்ளைக்காரன் என்ற ஒன்றை வைத்தே எங்களை நாயினும் கீழான வனாக நினைக்கும் அவனை நம்பி, நாம் அவனிடம் கைநீட்டுவதா....?

தோல்வியையே வெற்றியாக நினைக்கும் மனோபலம் அவளிடம் இருக்கவே செய்தது.

'சிவனே' என்று, இவனை எங்காவது போய் உழைக்குமாறு தூண்டிய அவர்களும், 'அப்பாடா' என்று இவனும் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டனர். தன்னைத்தானே உணரும் போதும், தன்னம்பிக்கை பிறக்கும் போதும் எவ்வளவு காரியங்கள் வெகுவாக இயல்பு நிலைக்குத் திரும்பி விடுகின்றன. ■




மனநிம்மதியும்
ஆனந்தமும்
அன்பு,
தியாகம்
இவற்றால்
மட்டுமே
கிடைக்கும்.

– விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நாங்கள் மட்டும் நடு வீதியில்....

## பட்டினியில் வாடும் பிள்ளைகள்...

கூடை சுமந்தோம்
படிப்பை இழந்தோம்...
இளமையை தொலைத்தோம்
இடுப்பு உடைந்து நிற்கிறோம்.
எங்களால் இந் நாடு வளர்ச்சி அடைந்தது
ஆனால் நாங்கள் மட்டும் நடுவீதியில்
அல்லல் பட்டு நிற்கிறோம்.....

புதிய வீடுகள் கட்டித் தாரோம் என்று சொன்னீர்கள்......ஐயா
இன்னும் நாங்கள் வாழ்வது இந்த மாளிகையில் தானே ஐயா
வீதிகள் புனரமைப்பு என்று சொன்னீர்கள்
நாங்கள் அதே வீதியில் தான் இன்னும்
மீன்கள் பிடித்துக்கொண்டு இருக்கோம் ஐயா.....

போராட்டம் என்று அழைத்து அதிலும்
அரசியல் தலைவர்கள் லாபம் கண்டார்கள்..
ஆனால் இன்று வரை சம்பள உயர்வு
போராட்டம் மட்டுமே நடக்குது ஐயா
ஆனால் தீர்வு தான் இல்லை'..

வேலையை விட்டு வீதிக்கு வந்தோம்
அடுத்த மாதம் சம்பளம் போச்சி
கடன்காரன் வீட்டுக்கு வந்தால்
என்ன பதில் நான் சொல்லுவேன் சாமி ....

பிள்ளைகள் பட்டினியால் வாடுமே சாமி
எங்கள் சம்பளத்தை கொஞ்சம் உயர்த்தி கொடுங்க சாமி.
நாங்கள் தான் படிக்கவில்லை
எங்கள் தலைமுறைகள் சரி நிமிர்ந்து
வாழட்டும் சாமி...

படிக்காத தாயின் குமுறல் கேக்குதா யாருக்காவது ...
இல்லை இதுவும் கடந்தே போகலாம்
மறந்து போனீர்களா...
கொடுத்த வாக்கினை நிறைவு செய்யுங்கள்
இல்லையேல் ... அரசியல் வாழ்க்கையில் இருந்து
நிரந்தரமாக விலகிச் செல்லுங்கள்.....

■ இணையம்




**நோயாளி** : ஒரு மாசமா என்னால வாயை திறக்கவே முடியல டொக்டர்...!
**மருத்துவர்** : என்னாச்சு....?
**நோயாளி** : போனமாசம் எனக்கு கலியாணம் ஆச்சு....



**கணவன்** : "இன்டைக்குத்தான், வெளவால் நேரா தொங்கி பார்க்கிறன்"
**மனைவி**: "அதுக்குள்ள குடிச்சிட்டு வந்துட்டிங்களா...?"

**மனைவி**: "நீங்க எனக்கு ஒரு பட்டுப் புடவை வாங்கித்தாற மாதிரி நேற்று கனவு கண்டன்"
**கணவன்** : "இன்டைக்கு அதக் கட்டிற மாதிரி ஒரு கனவு கண்டிரு, சரியாப் போயிரும்...."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்

- நில்மினி கஜேந்திரன் -

**கிறிஸ்தவமல்லாச் சபைகளுடனான உரையாடல் :**

கிறிஸ்தவ சபைகளுடனான உறவை, உரையாடலை ஏற்படுத்திய 2ம் வத்திக்கான் சங்கமானது, கிறிஸ்தவம் அல்லாத பிறமதங்களுடனும் உறவை, உரையாடலை ஏற்படுத்த விரும்புகிறது. இன்றைய உலகில் சமயச் சந்திப்புகள், சமய உரையாடல்கள், சமயப் புரிந்துணர்வு, சமய நல்லிணக்கத்தின் தேவையை அனைவரும் உணருகின்றனர்.

இன்று உலகெங்கும் காணப்படும் நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள், பதற்றம், சண்டை என்பனவற்றுக்கு மதங்களே காரணமாயிருக்கின்றன. எனவே, சமய ஒருமைப்பாட்டிற்கு மட்டுமல்லாது உலக அமைதிக்கும், மதங்களுடனான புரிந்துணர்வு, உரையாடல் மிக அவசியமானதாகும். வத்திக்கான் சங்கம், திருச்சபை, இறைவெளிப்பாடு, இன்றைய உலகில் திருச்சபை எனும் முக்கிய ஏடுகள் வழியாக வலியுறுத்தும் புதிய கருத்துக்களுக்கு அமைய திருச்சபையானது கிறிஸ்தவ சபைகளுடன் மட்டுமல்லாது, கிறிஸ்தவமல்லாத பிற சமயத்தவரோடும், ஏன் கடவுள் நம்பிக்கை இல்லாதவ ரோடும் கூடத் திறந்த மனதுடன் உரையாட வேண்டிய அவசரத் தேவை உள்ளது. இதன் விளைவாகவே சங்கம் “கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய விதித்தொகுப்பு” எனும் புரட்சிகரமான அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையானது திருச்சபை வரலாற்றிலே ஒரு திருப்புமுனை எனலாம். இதன்மூலம் உறவு உரையாடலுக்கும், உரையாடல் புரிதலுக்கும், பகிர்வுக்கும் இட்டுச் சென்று மீட்புப் பணியின் நிறைவை நோக்கிப் பயணம் செய்யும் ஒரு மக்கள் இயக்கமாய்த் திருச்சபை செயற்பட வழி திறக்கிறது.

“பல்வேறு வழிகளில் பற்பல முறைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாகப் பேசிய கடவுள்” எனும் திருவசனத்தின்படி மனிதன் உலகில் தோன்றிய காலம் தொடக்கம் அவன் கடவுளைத் தேடி வந்திருக்கின்றான். கடவுளும் பற்பல முறைகளில், பல வழிகளில் அவனோடு பேசி வருகின்றார். இதன் விளைவாகவே உலகின் பல்வேறு மதங்கள் தோன்றின. அன்று தொடக்கம் இன்றுவரை இயற்கையின் போக்கிலும், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளிலும் மறைந்திருக்கும் ஓர் ஆற்றலைப் பல்வேறு மக்கள் உணர்ந்து வந்துள்ளனர். சில வேளைகளில் ஒப்புயர்வற்ற ஒரு கடவுளைத் தந்தையாகவும் மக்கள் கண்டு வந்துள்ளனர். மேற்கூறிய அனைத்து விடயங்களின் மூலமும் ஆழ்ந்த சமய உணர்வில் மக்கள் வாழ்வை தோய்ந்திருக்கச் செய்துள்ளன. இதனாலேயே அனைத்துச் சமயங்களிலும் காணப்படுகின்ற உண்மையானதும் தூய்மையானதும் ஆன எதையுமே கத்தோலிக்கத் திருச்சபை வெறுத்து ஒதுக்குவதில்லை. அனைவரினதும் செயன்முறைப் பணிகள், வாழ்க்கை முறைகள், நெறிகள், கோட்பாடுகள் போன்றவற்றைக் கத்தோலிக்கத் திருச்சபை மதித்துப் போற்றுகிறது. இதனையே வத்திக்கான் சங்கமும் வலியுறுத்துகிறது. ஏனைய சமயங்கள் பின்பற்றுகின்ற அருள்நெறி சார்ந்த நலன்களையும், சமூகப் பண்பாட்டு விழுமியங்களையும் ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பேணி வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்பதனைச் சங்கம் மிகவும் வலியுறுத்துகிறது. இத்தகைய சங்கம் வலியுறுத்திய செயற்பாடானது, உறவுச் செடியாய் வளர்ந்து வருவதை யாராலும் மறுக்க முடியாது. இவ்வுரையாடலானது எதிர்பார்த்தளவில் வேகமாய் வளர்ச்சியடையவில்லை. இருப்பினும் பலன்கள் பல விளைந்துள்ளன. இதனைக் கிறிஸ்தவர்கள், பிறமதத்தினை நெருங்கி வாழும் இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் காணமுடிகிறது.

இலங்கை உலகின் முக்கிய சமயங்களான பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட நாடாகும். எனவே, இங்கு மதங்களிடையே புரிந்துணர்வு, உரையாடல் மிகத் தேவையானது. இதனை ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல. அனேக காலமாய்க் கிறிஸ்தவர்கள் பிற சமயத்தவரை எதிரிகளாய்க் கருதிக் கொண்டிருந்தனர். அவர்களின் வழிபாடுகள் மேல் குறைகளைக் கூறி, ஏளனமாய் நோக்கி, விநோத வேடிக்கையாகக் கருதி வந்தார்கள். ஆனால், இன்று இவ்வுரையாடல் மூலம் பிற சமயங்கள் பற்றி அறிந்தும், வழிபாடுகள் பற்றித் தெரிந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள பல சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன. இதனால், புரிந்துணர்வும், திறந்த மனப்பான்மையும், நல்லு றவும் ஏற்பட்டுள்ளது. மேலும், இச்சமய உரையாடல்களின் அனுபவங்கள் கிறிஸ்தவ நம்பிக்கையினை ஆழப்படுத்தியுள்ளன. இன்று நம் நாட்டில் சர்வ மதத் தலைவர்கள் சந்திப்புக்கள், உரையாடல்கள் மூலம் ஏற்பட்ட பல கூட்டு முயற்சிகள் பலனளித்துள்ளதைக் காணமுடிகிறது. இவையனைத்தும் வத்திக்கான் சங்கத்தின் முயற்சியின் பலன் என்றால் மிகையாகாது. ■

## வினா விடைப் போட்டி - இல 06

**சரியான விடைகள்**

1. யூதாஸ்
2. ஹங்கேரி நாட்டில் புடாபெஸ்ட் நகரில், 2020ல் செப்டம்பர் 13 முதல் 20ந் திகதி வரை
3. "தொழிலாளர் நிலைமை", திருத்தந்தை 13ம் லீயோவால், 1891ம் ஆண்டு
4. முதல் நற்செய்தி அறிவிப்பாளராக விளங்கிய இயேசுவே நற்செய்தியாகவும் விளங்கினார்.
5. யோவான் 6:56
6. 21வது பொதுச்சங்கம், திருத்தந்தை 23வது அருளப்பரால் 1959.01.25 இல்
7. எலக்ட்ரோலைட்டுகள், உடலைப் புத்துணர்ச்சி அடையச்செய்து, உடல் வெப்பத்தைத் தணிக்கும்.
8. கி.மு. 597 அளவில், இளம் அரசன் "யெகோயாச்சின்"
9. முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி, கொழும்பு சாஹிராக் கல்லூரியில்
10. சாமுவேல் ஆண்டவரிடம் மன்றாட, அவர் அன்று இடியும், மழையும் அனுப்பவே அச்சம் கொண்டனர்.

**சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:**

P. அனஸ்ரிக்கா,
இல. 16/16, வெயிலி குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

A.M.S. திவ்வியமலர்,
5ம் குறுக்கு,
திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.

திருமதி. பத்மாமேரி இரத்தினசாமி,
133A, அம்மன் கோவில் வீதி,
கல்முனை - 01.

## எண்ணிப்பார்க்கையில் ...

### விடையில்லா கேள்விகள்



நம்மைச் சுற்றிலும் எத்தனையோ விடயங்கள்
எவ்வளவோ கேள்விகளுடன்!
விடையில்லா கேள்விகள் நம்மை
குழப்பத்தில் ஆழ்த்தி நிற்கின்றன.
இதனால் நமது
நிம்மதி தொலைகின்றது
தூக்கம் கெடுகின்றது, சமயத்தில்
வயிறார உண்ணவும் முடிவதில்லை.
நிதானமாக எண்ணிப்பார்க்கையில்
உலகில் மட்டுமா? அண்டம் அனைத்திலுமல்லவா
விடையில்லா விடயங்கள்!
அனைத்திற்கும் பதிலை யாராலும்
கண்டு கொள்ள முடிவதில்லை
கண்டு கொள்ளவும் முடியாது!
விடையில்லா கேள்விகளையிட்டு
அதிகம் சிந்தித்து மண்டையை
உடைத்துக் கொள்ளக் கூடாது
அவற்றுக்கு விடை தெரியாமல் இருப்பதே மேல்
நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்
நாம் எதிர்பாராத வேளையிலே
நம்மை வந்து சேரும்
ஐசக் நியூட்டன் எப்படி புவியீர்ப்பைக்
கண்டு பிடித்தார் என்பதை
எண்ணிப்பார்க்கின்றபோது – அதுபோல்
நமக்கும் ஒரு நாள் விடை தெரிய வரும்
என்பது நெஞ்சுக்குப் புலனாகும்.

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

**தோல் சுருங்கும்!**



இயற்கையான பழங்கள், காய்கறிகள் ஒரே வடிவத்திலும், ஒரே நிறத்திலும் இருக்காது. தக்காளி ஒரு வாரம் வரை கெடாமல், தோல் மட்டும் சுருங்கினால் அது இரசாயனம் அற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சடலங்கள்!

## நடந்தது என்ன ...?







உலகில் அனைவருக்குமே நீண்ட நாள் வாழ வேண்டும் மற்றும் நாம் இறந்த பின்பும் நம் புகழ் நிலைத்திருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும்.

பொதுவாக ஒருவர் இறந்த பின்பு அவரது உடல் அழுகி மக்கி விடும். ஆனால், உலகில் இறந்த பின்பும் உடல் அழுகாமல் இன்னும் சில சடலங்கள் அப்படியே உள்ளன என்றால் பாருங்கள். இவற்றில் சில சடலங்கள் மக்களின் பார்வைக்காகப் பதப்படுத்தப் பட்டுள்ளன. இன்னும் சில சடலங்கள் இயற்கையாகவே பதப்படுத்தப் பட்டுள்ளன. இங்கு அந்த சடலங்கள் பற்றிய சுவாரஸ்ய கதைகள் உங்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

ரேமெஸ்ஸெஸ் II : இவர் எகிப்தியர்களின் 20 ஆம் வம்சத்தின் போது பாரோவாக இருந்தவர். இவரது உடலைத் தோண்டி வெளியே எடுத்து, CT ஸ்கேன் செய்து பார்த்ததில், தொண்டையில் முதுகெலும்பைத் தாக்கும் அளவில் ஆழமான வெட்டுக் காயம் ஏற்பட்டு இறந்திருப்பது தெரியவந்துள்ளது.

ஜியோஹே : 2003 இல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சீனாவில் உள்ள மயானத்தைத் தோண்டிக் கொண்டிருக்கும்போது இந்த அழகிய மம்மி கிடைத்தது. இந்த சடலத்தின் கூந்தல், சருமம் மற்றும் கண் இமைகள் அப்படியே அழுகாமல் இருந்தன. மேலும் இந்தச் சடலமானது கம்பளித் தொப்பி அணிந்து இருந்தது.

ஜோன் டொரிங்டன்: இவர் ஒரு சிறு அதிகாரி. 22 வயதில் ஓர் ஆய்வுப் பயணத்தின் போது லெட் நச்சுப் பொருளால் மரணமடைந்தார். இவருடன் வேறு மூன்று அதிகாரிகளும் மரணமடைந்தனர். எனவே, இவர்களை உறைந்த பனிப்பிரதேசத்தில் அடக்கம் செய்தனர். ஒருநாள் இவர்களது உடலைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டி எடுக்கையில் இவரது உடல் மட்டும் அழுகாமல் அப்படியே அவர்களைக் கூர்ந்து பார்ப்பதுபோல் இருந்ததாம்.

லேடி ஸின் ஜுஹி: சீனாவில் உள்ள ஒரு கல்லறையில் இருந்து தோண்டி எடுத்த போது, இந்தப் பெண்மணி இறந்து சுமார் 2000 ஆண்டுகள் இருக்கும் என்பது தெரிய வந்தது. இந்த பெண்மணியின் உடலில் உள்ள திசுக்கள் மிகவும் மென்மையாகவும், மூட்டுகள் வளையக்கூடியதாகவும் இருந்தன. மேலும் இந்த மம்மியின் முடி அப்படியே இருந்தது மற்றும் நரம்புகளில் ஏ வகை இரத்தப்பிரிவு இருந்தது தெரிய வந்தது. என்ன ஒரு ஆச்சரியம்!

லா டான்செல்லா: இந்த மம்மி இறந்து சுமார் 5000 வருடங்கள் இருக்கும் என்று சொன்னால் நம்பமுடிகிறதா? ஆம், லா டான்செல்லா என்னும் இந்த மம்மி 15 வயதில் ஆழ்ந்த தூக்கத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டும் ஒருசில போதைப் பொருள் கொடுத்து, சூரியனுக்கு பிரசாதமாக புதைக்கப்பட்டார். அதிலும் இந்த மம்மி இன்கா மக்களின் உடை யணிவித்து புதைக்கப்பட்டிருந்தது.

டார்சோ இடிகிலோவ்: இவர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர். இவர் தியான நிலையில் அமர்ந்து மந்திரம் ஜெபித்துக் கொண்டிருக்கும் போதே இறந்துவிட்டார். இவர் இறப்பதற்கு முன், தன் சிஷ்யர்களிடம் தான் இறந்த பின் தன்னைப் புதைத்துவிட்டு, சில வருடங்கள் கழித்து தோண்டி எடுக்குமாறு கூறினாராம். அப்படியே செய்ததில், அவர் சற்றும் அழுகாமல் அப்படியே இருந்தார்.

டோலண்ட் மனிதன்: இந்த மம்மி இறந்து சுமார் 2000 வருடங்கள் இருக்கும். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு எதிர்பாராதவிதமாக கிடைத்த இந்தச் சடலம் சமீபத்தில் தான் இறந்திருக்கக்கூடும் என்று நினைத்தனர். ஏனெனில் அந்த அளவில் சடலமானது இருந்தது. ஆனால் ஆய்வு செய்ததில் இவர் 2000 வருடங்களுக்கு முன் தூக்கு மாட்டி இறந்ததாகத் தெரியவந்துள்ளது.

ஸிதா (Zita): ஸிதா ஒரு நல்ல மனம் மற்றும் கருணை உள்ளம் கொண்ட ஒரு ஞானி. இவர் உயிருடன் இருக்கையில், இவரைச் சுற்றி ஒரு மதப் பிரிவினர் இருந்தனர். இவர் 1272 இல் இறந்தார். 300 வருடங்கள் கழித்து அவரது உடலை தோண்டிப் பார்க்கையில் அவரது உடல் அழுகாமல் அப்படியே இருந்தது தெரிய வந்து, தற்போது இத்தாலியில் இவரது உடல் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.


■ இணையம்



## நாவல் பழம்

நாவல் மரத்தின் பழம், இலை, மரப்பட்டை, விதை எல்லாமே மருந்து. விதைகளை நிழலில் உலர்த்தி தூளாக்கி காலை, மாலை ஒரு கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோய் கட்டுப்படும்.

# கல்லறை விழா




ஏ. மனிதா
கருவறை உன் ஆரம்பம்
கல்லறை உன் முடிவு
என்று நீ,
வாழ்க்கை வட்டத்தை
முடித்து விட்டாயா?
இல்லவே இல்லை
கல்லறை,
உன் புது வாழ்வின்
கருவறை
இதை நீ மறந்திடாதே
கல்லறையில் வைக்கப்பட்ட இயேசு
வீரனாய்
சாவை ஜெயம் கொண்டார்
கல்லறை, உன்
மறு வாழ்வின் அடையாளம்
மெழுகுவர்த்தி ஏற்றி
ஒளியூட்டும் போதும்
மலர்கள் தூவி
அலங்கரிக்கும் போதும்
கல்லறை உன்
புது வாழ்வின் அடையாளம் – இதை
என்றும் மறவாதே
இதுவே கிறிஸ்தவனின் அடையாளம்.

எஸ். கே. ராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சகோதரி ஜூடின் FMM

# மரியாதை இராமன்

முன்னொரு காலத்தில் இராமன் என்றொரு விடலைப் பையன் இருந்தான். அவன் பள்ளிக்கூடத்துக்குச் செல்லாமல், எவ்வித காரியமும் செய்யாமல் சும்மாவே இருந்து காலம் கழிப்பவன். அவனுடைய சோம்பேறித்தனத்தைக் கண்டு ஊரார் அவனைச் சோம்பேறி இராமன் என்றே அழைத்தார்கள்.

அந்த ஊரில் ஒரு பாட்டி இருந்தாள். அவளுக்கு உற்றார் உறவினர் கிடையாது. பரம்பரைச் சொத்தான ஒரு துண்டு நிலத்தில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் வாழ்ந்து வந்தாள். ஒருநாள் வெளியூர் ஆசாமிகள் நான்கு பேர் அவளுடைய வீட்டுக்கு வந்தார்கள். அவர்கள் கிணறு தோண்டும் வேலைக்காகக் கிழவி வசிக்கும் தெருக்காரர் ஒருவருக்கு அமர்த்தப்பட்டவர்கள். அவர்களுக்கு கிழவி வீட்டிலேயே சாப்பாட்டுக்கும், தங்கிக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்று இடுப்பளவு குழிவெட்டிக் கொண்டிருந்தபோது ஒரு தவலைப் பானையைக் கண்டெடுத்தார்கள். பானை நிறைய பொற்காசுகள் இருந்தன. அவர்களில் தலைவனாகத் தெரிந்தவன்,

"நாம் கிணறு வேலை முடிந்ததும் இந்தப் புதையலைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்வோம். அதுவரைக்கும் பாட்டியிடமே பானையைக் கொடுத்துவைப்போம்"


என்றான். மற்றவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். கிழவியிடம் சென்று,

"பாட்டி, இந்தப் பானையைப் பத்திரமாக வச்சிருங்க. நாங்க நாலு பேருமா வந்து கேட்கிறப்போ கொடுங்க" என்றார்கள். கிழவியும் பானையை வாங்கி வைத்துக்கொண்டாள்.

மறுநாள் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்த போது தாகம் ஏற்பட்டது. "பாட்டியிடம் ஒரு பானையில் தண்ணீர் வாங்கி வா" என்று தங்களில் ஒருவனை ஏவினான் தலைவன். தண்ணீர்ப் பானை வாங்கச் சென்றவனுக்குப் பாதி வழியில் ஒரு யோசனை தோன்றியது. புதையல் முழுவதையும் நாமே எடுத்துக் கொள்வோம் என்று நினைத்தான்.

"பாட்டி, நேற்று கொடுத்த பானையை உங்களிடமிருந்து என் கூட்டாளிகள் வாங்கிவரச் சொல்றாங்க" என்றான். நான்கு பேரில் ஒருவனிடம் மட்டும் எப்படிப் பானையைக் கொடுப்பது என்று தயக்கம் கிழவிக்கு.

"என்னப்பா, இந்த ஆளிட்ட பானையை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொடுத்து அனுப்பவா?" என்று வீட்டில் இருந்தபடியே குரல் கொடுத்தாள். குழியில் இருந்த மற்றவர்களும் தண்ணீர்ப் பானையைக் கேட்ட நினைப்பில், குழிக்கு வெளியே தலையைக் காட்டி,

"ஆமா, கொடுத்து அனுப்புங்க" என்று ஏக காலத்தில் கூவினார்கள். பாட்டியிடம் பானையை வாங்கிக் கொண்டவன் வேறு வழியில் ஓட்டமெடுத்தான்.

"என்னடா, தண்ணீர் இன்னும் வரலையே" என்றபடி அவர்கள் வேலையைப் போட்டுவிட்டுப் பாட்டியிடம் வந்தார்கள்.

"என்ன பாட்டி எங்கே அந்தப் பயல்? தண்ணீர் கேட்டு அனுப்பினோமே. கொடுத்து அனுப்பக்கூடாதா?" என்று கேட்டார்கள்.

"தண்ணியா? நீங்க கேட்டதா சொல்லி நேற்றைக்கு நீங்க கொடுத்து வச்ச தவலையை அல்லவா கேட்டான். நான் அப்பவே கொடுத்து அனுப்பிச்சேனே" என்றாள் கிழவி. புதையல் கைவிட்டுப் போனதை நினைத்து அவர்கள் பதறிவிட்டார்கள். கூட்டுக்களவாணி தங்களை ஏமாற்றிப் போனான் என்ற எரிச்சல். அந்த எரிச்சல் கிழவியின் மீது கோபமாகப் பாய்ந்தது.

"ஏ, கிழவி அந்தப் பானையில் பொற்காசுகள் வச்சிருந்தோம். எனக்குத் தெரியாதா?" என்று சீறினார்கள்.

"நான் எதுக்கப்பா அதைத் திறந்து பார்க்கப்போறேன்" என்றாள் கிழவி. அவளுடைய நேர்மைக் குணத்தில் அவர்களுக்கு சந்தேகம் இல்லை. ஆனால், அவள் மீதான கோபம் அதிகரித்தது. "உன்னிடம் நேற்று என்ன சொன்னோம், நாலுபேரும் சேர்ந்தாப்போல வந்து கேட்கும்போதுதானே பானையைத் தரவேண்டும் என்றல்லவா? நீ ஒருத்தன் கேட்டு எப்படி கொடுக்கப்போயிற்று?" என்று குதித்தார்கள்.

"என்னப்பா இது.... நீங்களும்தானே, "கொடுத்தனுப்பு" என்று வேலைத்தளத்திலிருந்து குரல் கொடுத்தீங்க" என்று கிழவி தன் பக்க நியாயத்தைச் சொல்ல ஆரம்பித்தாள்.

இவர்களுக்குள் ஏற்பட்ட வாதம் வழக்கானது. அந்த வழக்கு ஊர்ப் பெரியவரிடம் சென்றது. என்ன தீர்ப்புச் சொல்வது என்று தெரியாமல் விழித்தார் அவர். அப்போது கூட்டத்தில் நின்று வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த சோம்பேறி இராமன், அங்கிருந்த மேடையில் ஏறி உட்கார்ந்தான். "நான் தீர்ப்புச் சொல்கிறேன்" என்றான். 'இந்தச் சோம்பேறி என்னதான் சொல்கிறான் பார்ப்போமே' என்ற ஆவல் கூட்டத்தினருக்கு.

"ஆஹா, சொல்" என்றனர். இராமன் வழக்குத் தொடுத்திருந்த மூன்று பேரையும் பார்த்து,

"பாட்டியிடம் நாலு பேரும் சேர்ந்துவந்து கேட்டாதானே பானையைக் கொடுக்கணும்னு பேச்சு. மூணு பேர் மட்டும் வந்து கேட்டா எப்படிக் கொடுப்பாங்க? அந்த ஓடிப்போனவனையும் அழைச்சிட்டு நாலு பேரா வந்து கேளுங்க. பானை கிடைக்கும்!" என்று சொன்னான். ஊரார் அன்று முதல் அவனுக்கு மரியாதை கொடுத்தனர். அவன் பெயரும் "மரியாதை இராமன்" என்றாயிற்று.

**மூலம் : சாதிக்க உதவும் சமயோசித அறிவு**





## திருடர்

மக்களுக்காய் உயிர்விடுவேன் என்பார்
மக்கள் பணம் தனையுறிஞ்சித் தின்பார்
எக்கணமும் மக்கள்பணம்
தனைத்திருடக் கன்னமிடும்
உக்கலிவர் வாக்களிப்பீர்! என்றதிலும் நின்றார்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீ மூங்கிலா, கரும்பா?

ஒரு மனிதனுக்குத் தன் சக்திகள் தெரியாமல் இருந்தன. ஒரு தொழிலதிபரைச் சந்தித்துக் கேட்டான். அதற்கு அவர், "நீ மூங்கிலா, கரும்பா? கண்டுபிடி. மூங்கிலுக்குள்ளே வெற்றிடம் இருக்கும். அதற்குள் நுழையும் காற்று இசையாகும். கரும்பின் உள்ளே சாறு இருக்கும். கசக்கி எடுக்க வேண்டும். நீ இசையை வெளிப்படுத்தும் மூங்கிலாய் இரு. கசக்க வேண்டிய கரும்பாய் இராதே" என்றார்.

## ஒரு குவளைத் தயிரில் ...

'உங்கள் எல்லா சிக்கல்களுக்குமான தீர்வு, ஒரு குவளைத் தயிரில் இருக்கிறது" என்றார் ஒருவர். "எப்படி" என்று எல்லோரும் கேள்வி எழுப்பினர். "தயிருக்குள் இருக்கும் வெண்ணெய் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. தயிரைக் கடைகிறபோதுதான், அதிலிருந்து வெண்ணெய் திரள்கிறது. பிரச்சினை என்கிற தயிர்ப் பாத்திரத்தைப் பார்த்து மிரள்வதால் பயனில்லை. பிரச்சினைகளைப் புத்தி கொண்டு கடைந்தால் தீர்வு என்கிற வெண்ணெய் திரண்டு வரும்" என்றார்.

- ஜே.எச்.இரத்திராஜா -

# என்ன செய்தார்கள் தெரியுமா....?

ஒரு மானுடவியலாளர் [Anthropologist] ஆபிரிக்க பழங்குடியின சிறுவர்களுக்காக ஒரு போட்டி நடத்தினார்.

அவர் ஒரு கூடை நிறைய பழங்களை நிரப்பி ஒரு மரத்தின் கீழ் வைத்தார்.

அந்தச் சிறுவர்களை அந்த மரத்திலிருந்து ஒரு நூறு மீட்டர் தள்ளி வரிசையாக நிற்க வைத்தார். யார் முதலில் அந்த மரத்தைத் தொடுகிறாரோ அவர்களுக்கு அந்தக் கூடைப் பழங்கள் முழுவதும் பரிசாகத் தரப்படும் என்று அறிவித்தார்.

அவர் அந்த சிறுவர்களைத் தயார் நிலையில் வைத்து விசில் ஊதினார்.

அப்பொழுது அந்தச் சிறுவர்கள் என்ன செய்தனர் தெரியுமா?

அவர்கள் அனைவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஒன்றாக ஓடி மரத்தை அடைந்து, அந்தப் பழங்களைப் பகிர்ந்து கொண்டு சாப்பிடத் தொடங்கினர்.

அந்த மானுடவியலாளர் ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்து ஏன் அவ்வாறு செய்தீர்கள்? என வினவினார்.

அவர்கள் எல்லோரும் ஒரே குரலில்,

"உபுண்டு" எனக் குரல் எழுப்பினர். அதற்கு அர்த்தம்

"பிறர் சோகத்துடன் இருக்கும்போது எப்படி ஒருவர் மட்டும் சந்தோஷமாக இருக்க முடியும்? 'உபுண்டு' என்பதன் பொருள்

"நான் என்றால் அது நானல்ல! நாங்கள்!

("I AM BECAUSE,WE ARE !)

**நாமும் அந்த ஆபிரிக்கச் சிறுவர்களிடம் இருந்து பாடம் கற்றுக்கொள்ள இடமிருக்கிறது!**

ஒரு அழகான கதை :



■ நான் மிகவும் ரசித்த பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அரசி அன்னை திரேசா!



தொடர் - 3



- வாகரைவாணன் -

இருளில் ஒரு விளக்காக
இருக்க விரும்பினாள்
அதுவும்
உருகும் ஓர்
மெழுகுதிரியாக!

அப்போது வயது
பதினேழு
ஒப்பற்ற எண்ணங்கள்
உள்ளத்தில்
ஊற்றெடுத்தன!

**அக்னஸின் ஆசை**

இந்தச் சமயத்தில்
இந்தியாவில்
அருட்பணியாற்றிய
இளங் குரவர்கள்
பத்திரிகைகளில்
எழுதிய கடிதங்கள்
அவள்
பார்வையில் பதிந்தன.

இதனால்
அக்னஸின் மனதில்
இந்தியா வந்து
இருந்து கொண்டது.

கன்னியாகும்
அக்னஸின் ஆசைகள்
இந்தக்
கடிதங்களால்
கனிந்தன.

அக்னசுக்கு
லொறற்றோ மடம்
அறிமகமானது
அவள் அதில்
ஒரு அங்கமாக
ஆயத்தமானாள்.

அன்னையின் மௌனம்
அக்னசுக்கு
அங்கீகாரம் தந்தது
ஆனாலும்

அவள் விழிகளில் இருந்து
அருவிகள் ஓடின.

அன்னையின்
மௌனத்தின் முன்
அண்ணனின்
எதிர்ப்பு பீரங்கி
அநாதையானது.

சொந்தங்களின் பிரிவு
சொல்லுக்குள்
அடங்காது
அது எப்போதும் ஒரு
சோகக் கதையே!

பந்தங்களை அறுக்கும்
பராக்கிரமம்
யாரிடம் இருக்கிறது?

துறவி கூட
இதில்
தோற்றுப் போகின்றான்.

பாசம் என்பது
இறுக்கமான பசை.

இந்தப் பசையின்
ஒட்டு
இறுதிவரை இருக்கும்

உள்ளம் ஒரு கிணறு
அதில்
உணர்ச்சி நீர்
எப்போதும்
ஊறிக் கொண்டே
இருக்கும்.

உணர்ச்சியின் முன்
அறிவும் ஊமையே.

உணர்ச்சி இல்லாத
உள்ளம்
இந்த
உலகத்தில்எங்கே
இருக்கிறது?

அக்னசுக்கு
அல்பேனியா
விடை கொடுக்க
ஆயத்தமாகின்றது.

ஒரு வித சோகம்
அதில்
ஒட்டிக் கொள்கிறது.

சினேகிதிகள்
தங்கள்
சிரிப்பையே
மறந்து போகின்றனர்.

உறவினர் உள்ளம்
அடுப்பில் வைத்த
உலையாகின்றது.

அன்னை, மகளை
அப்படியே
அள்ளிக் கொள்கிறாள்.

அக்காவின்
முத்த மழையில்
அன்புத் தங்கை
மூழ்கிப் போகின்றாள்.

உள்ளங்கள் பேச
உதடுகள் துடிக்க
வெள்ளம்
விழிகளல் இருந்து
வெளியேறுகின்றது.

அயர்லாந்துக்குப் போகும்
புகைவண்டி
அவருக்கும் ஓர்
அரியாசனம் தருகின்றது
அதில் அவள்
இயேசுவின் இளவரசியாக
இருந்து
கையசைத்து
விடை தருகின்றாள்.

- தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவம்

## வாழைத்தண்டு

வாழைத்தண்டு ஆரோக்கியம் நிறைந்த உணவுப்பொருள் இதில் என்னென்ன மருத்துவக் குணங்கள் உள்ளன என்பது நம்மில் அதிகமானோர்க்குத் தெரியாது. ஆரோக்கியம் என்று தெரிந்தாலும் கூட, வாழைத்தண்டு அதிகமாகத் துவர்க்கும் தன்மை கொண்டதால், நாம் அதைச் சாப்பிடுவதில்லை. ஆனால், துவர்ப்பை கொஞ்சம் பொறுத்துக் கொண்டு, வாழைத்தண்டு சாறினைக் குடித்தால் அற்புதமான நன்மைகள் இருக்கின்றன.

■ வாழைத்தண்டைச் சாறாகவோ அல்லது பொரியலாகவோ, கூட்டாகவோ உணவில் எடுத்துக் கொண்டே வந்தால், உடலில் உள்ள தேவையில்லாத நச்சுக் கழிவுகள் வெளியேறும். உடல் புத்துணர்ச்சியாகவும் இலேசாகவும் மாறிவிடும்.

■ வாழைத்தண்டுச் சாறினைக் காலையில் வெறும் வயிற்றில் தினமும் குடித்து வந்தால், விரைவில் சிறுநீரகக் கற்கள் கரைந்து விடும் அல்லது சிறுநீரின் வழியே வெளியேறிவிடும் என்பது நமக்குத் தெரியும். சிலர் துவர்ப்பு அதிகம் இருப்பதால் சிறிது உப்பு சேர்த்துக் கொள்வார்கள். அப்படிக் குடிக்கும் வாழைத்தண்டு ஜூஸில் இரண்டு பச்சை ஏலக் காயைத் தட்டிப் போட்டுக்கொள்ள வேண்டும். இப்படிக் குடிக்கும்போது கற்கள் உள்ளிருக்கும்போதும், வெளியேறும்போதும் ஏற்படுகின்ற வலி கட்டுப்படும். இதேபோல், வாழைத்தண்டு ஜூஸில் சிறிது எலுமிச்சம் சாறைச் சேர்த்துக் குடித்து வந்தால் சிறுநீர்க் கற்கள் தோன்றவே தோன்றாது. வாழைத்தண்டில் உள்ள பொட்டாசியம் மற்றும் எலுமிச்சையில் உள்ள சிட்ரிக் அமிலம் இரண் டும் சேர்ந்து, பொட்டாசியம் சிட்ரேட்டாக மாறிவிடும். இது கிட்னியில் கற்கள் உருவாகாமல் பாதுகாக்கும்.

■ உடல் எடையைக் குறைக்கப் பலரும் பல்வேறு வழிகளைப் பின்பற்றுவார்கள். ஆனால் வாழைத் தண்டு சாறு குடிப்பதன் மூலமும் உடல் எடையைக் குறைக்க முடியும். வேகமாக உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இது மிகவும் நல்ல பலன்களைத் தரும். வாழைத்தண்டில் அதிக அளவு நார்ச்சத்து இருப்பதால், சாறாகவோ அல்லது வேறு விதங்களில் உணவாகச் சமைத்தோ சாப்பிட்டு வந்தால், அதிகமாகப் பசி எடுக்காது. அதனால் கண்ட நேரங்களில் நொறுக்குத் தீனி சாப்பிடுவது குறையும். வாழைத் தண்டில் உள்ள அதிக அளவிலான நார்ச்சத்து கொழுப்பைக் குறைக்கும் ஆற்றல் கொண்டது. குறிப்பாக அடிவயிற்றுப் பகுதியில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பை வேகமாகக் கரைக்கும். வாழைத்தண்டுடன் இஞ்சிச் சாறினையும் சேர்த்து வாரத்துக்கு இரண்டு முறை உண்டு வந்தால், நல்ல பலன் கிடைக்கப் பெறலாம்.

■ சிலருக்கு இலேசான உணவுகள் சாப்பிட்டாலும், சிலருக்கு என்ன சாப்பிட்டாலும் ஜீரணமே ஆவதில்லை. அடிக்கடி ஜீரணக் கோளாறால் அவதிப் படுவார்கள். இவர்கள் வாழைத் தண்டினைச் சமைத்தோ, சாறாகவோ சாப்பிட்டு வர, விரைவில் பலன் உண்டாகும். உடலில் உள்ள கழிவுகள் வெளியேறுவதால், உணவு ஜீரணமாவதற்கான அமிலங்கள் சரியான முறையில் உற்பத்தியாகும். அஜீரணக் கோளாறுகள் நீங்கும். உணவு செரிமானச் சக்தி அதிகரிக்கும்.

## கறிவேப்பிலை இட்லி



**தேவையானவை**

**இட்லி நறுக்கிய துண்டுகள்**
**நெய் - 1 1/2 மே.கரண்டி**

**அரைக்க**

**கறிவேப்பிலை - 3 கப்**
**கடலைப்பருப்பு - 2 மே.கரண்டி**
**காய்ந்த மிளகாய் - 4**
**உளுத்தம் பருப்பு - 1 மே. கரண்டி**
**சீரகம் - 1 தே. கரண்டி, மிளகு - 1 மே. கரண்டி**
**பெருங்காயத்தூள் - 1 தே.கரண்டி**
**உப்பு - தேவையான அளவு, கடுகு - 1/2 தே.கரண்டி**

**அரைக்க**

**கடுகு, உளுத்தம்பருப்பு - 1 தே. கரண்டி**
**காய்ந்த மிளகாய் - 2**

**செய்முறை:** அரைக்க வைத்துள்ள பொருட்களை தாய்ச்சியில் எண்ணெய் விடாமல் சிவக்க வறுத்து ஆறியதும், சொரசொரப்பாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். மற்றுமொரு தாய்ச்சியில் சூடானதும், ஒரு தேக்கரண்டி நெய் ஊற்றி, கடுகு, உளுத்தம்பருப்பு, காய்ந்த மிளகாய் சேர்த்துத் தாளிக்கவும். இவற்றோடு வெட்டி வைத்துள்ள இட்லி, அரைத்து வைத்துள்ள கறிவேப்பிலை பொடி சேர்த்து நெய்யை சிறிது சிறிதாக ஊற்றி கிளறி பரிமாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையாக இருக்கவா?



ஒரு மருத்துவர், நோயாளி ஒருவருக்கு அவசரச் சிகிச்சை தேவைப்படுவதாக அழைக்கப்பட்டிருந்ததால், வேகமாக மருத்துவமனைக்குள் நுழைந்தார். விரைவாகத் தன் உடைகளை மாற்றிக்கொண்டு சிகிச்சைப் பிரிவுக்கு சென்றுகொண்டிருந்தார். அங்கே சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய இளைஞனின் தந்தை மருத்துவரின் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். மருத்துவரைக் கண்டதும் கோபமாக,

"என் மகன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான்... ஏன் நீங்கள் இங்கு வர இவ்வளவு தாமதம்? உங்களுக்குப் பொறுப்புணர்ச்சி இருக்கிறதா?" என்று கதறினார்.

மருத்துவர் புன்னகையுடன், "மன்னியுங்கள், நான் மருத்துவமனையில் இல்லை... எனக்கு அழைப்பு வந்ததும் என்னால் இயன்ற அளவு விரைந்து வந்தேன்... சற்றுப் பொறுமையாக இருங்கள்" என்று கூறினார்.

"பொறுமையாக இருக்கவா?" அந்த தந்தை மேலும் ஆத்திரத்துடன்,

"உங்கள் மகன் இவ்வாறு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தால் நீங்களும் பொறுமையாக இருப்பீர்களா? உங்கள் மகன் இறக்க நேர்ந்தால் என்ன செய்வீர்கள்" என்று கொந்தளித்தார்.

மருத்துவர் சிரித்த முகத்துடன், "எங்களால் இயன்ற அளவு முயற்சி செய்கிறோம், நீங்களும் கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார்.

"கையறுநிலையில் இருப்பவனுக்கு அறிவுரை கூறுவது மிகவும் எளிது" தந்தை முணுமுணுத்தார்.

அறுவைச் சிகிச்சை சில மணி நேரங்கள் வரை நடைபெற்றது. மருத்துவர் மகிழ்ச்சியுடன் வெளியே வந்தார்,

"உங்கள் மகன் பிழைத்துவிட்டார். மேற்கொண்டு ஏதும் சந்தேகம் என்றால் செவிலியரைக் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்" என்று கூறியபடி அவசரமாக போய்விட்டார்.

சற்று நேரத்தில் வந்த செவிலியரிடம்,

"அந்த மருத்துவர் அத்தனை அகங்காரம் பிடித்தவரா? என் மகனின் நிலையை என்னவென்று கூறக்கூட அவருக்கு நேரமில்லையா?" என்று நொந்துகொண்டார் தந்தை.

அதற்கு அந்த செவிலியர் கண்ணீர் மல்க, "அந்த மருத்துவரின் மகன் நேற்று ஒரு விபத்தில் இறந்துவிட்டார்... இன்று, அவர் மகனை அடக்கம் செய்யும் காரியங்களில் ஈடுபட்டிருந்தார். உங்கள் மகனுக்கு அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று அழைத்தவுடன் அந்த வேலையை ஒத்தி வைத்து விட்டு ஓடி வந்து உங்கள் மகனையும் காப்பாற்றி விட்டார். இப்போது மீண்டும் மகனை அடக்கம் செய்யப் புறப்படுகிறார்" என்று கூறினாள்.

**நீதி:**

எவரின் மனநிலையையும் நாமே தீர்மானிக்கக் கூடாது, அவர்கள் வாழ்க்கையைப் பற்றியும், மனோநிலையைப் பற்றியும் நாம் அறிந்திருக்காதவரை!!

"நம் வாழ்க்கையில் பாதிப் பிரச்சினைகள் கற்பனையானவை...

மீதிப் பிரச்சினைகள் தற்காலிகமானவை..."

இன்பங்கள், துன்பங்கள் எதுவுமே
நிரந்தரமாக இருக்கப் போவதுமில்லை...

பின்பு ஏன்...???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஒன்பது மாதங்களாக தொண்டனில் மறை மாவட்ட 'சமூக அக்கறை' ஆண்டினைச் சிறப்பிக்கும் வண்ணம் தொடர்ச்சியாகக் கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகள் பற்றிய சுருக்கத் தொடரினை எழுதி வந்தேன். கடந்த அக்டோபர் மாதத்துடன் அது நிறைவுக்கு வந்தது. தொடர்ந்தும் ஏதாவது ஒன்றைக் குறித்து எழுத வேண்டுமென எண்ணியவேளையில் 'தொண்டன்' ஆசிரியர் அருட்பணி பயஸ் பிரசன்னா அடிகளார் 'நீங்கள் வெட்டாப்பில் இளையோருக்கு எழுதி வருபவற்றைப் படித்தேன் நன்றாகவுள்ளது. அதுபோன்றதொரு தொடரினை தொண்டன் வாசகர்களுக்காவும் எழுதும்படி கேட்டுக் கொண்டார். அவரின் வேண்டுகோளுக்கிணங்கி இத் தொடரினை எழுதலாமென எண்ணி எழுதுகின்றேன். இப் பக்கம் குறித்த வாசகர் உங்களது மேலான கருத்துகளை எதிர்பார்த்து நிற்கிறேன்.



# நிலையான செல்வத்தை நிதமும் சேமிப்போம்!

இன்று நாம் வாழும் சமூகத்தில் புதிது புதிதாக உருவாகியுள்ள பணக்காரர்களையும், செல்வம் படைத்தவர்களையும் காண்கிறோம். அவர்களைக் குறித்துப் பலரும் பேசும்போது 'எங்கிருந்து இவர்களுக்கு இவ்வளவு பணமும், சொத்தும் வந்து சேர்ந்தன' என்று கேள்வி எழுப்புகின்ற நிலையையும் காண்கிறோம். அதற்காகப் புதிதாக செல்வம் படைத்தவர்கள் உருவாகக் கூடாது என்கின்ற கருத்துடையவன் நான் கிடையாது. ஆயினும் தீடிரென்று பணம் படைத்தவர்களாக மாறியவர்கள் தங்களது பழைய நிலையினை மறந்துவிடக் கூடாது. "காசேதான் கடவுளப்பா;! அந்தக் கடவுளுக்கும் அது தெரியுமப்பா!" என்கின்ற பாடல் வரிகளுக்கொப்ப செல்வம்தான் வாழ்வு என்கின்ற நிலைக்கு வந்து விடக்கூடாது.

**நமது சிந்தனைக்காக:** எலியொன்று வைர வியாபாரி வீட்டிலிருந்து ஒரு வைரத்தை விழுங்கிவிட்டது. மிகவும் விலையுயர்ந்த வைரம் அது. வியாபாரி எலி பிடிப்பவனைப் பார்த்து எப்படியாவது அந்த எலியை சுட்டுக் கொன்று வயிற்றிலிருக்கும் வைரத்தை எடுக்க உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். எலி பிடிப்பவனும் தன் துப்பாக்கியுடன் வந்து விட்டான். அதைச்சுட எலி அங்கும் இங்குமாகப் போக்குக்காட்டி ஓடியதில் திடீரென்று ஆயிரக்கணக்கான சக எலிகள் ஒன்று கூடிவிட்டன. ஆயிரக்கணக்கான எலிகளுக்கிடையேயும் அந்த வைரம் விழுங்கிய எலி மட்டும் அந்த எலிக்கூட்டத்தோடு சேராமல் ஒதுங்கித் தனித்தே நின்றிருந்தது. எலி பிடிப்பவனுக்கு அது வசதியாகப் போய்விட்டது. சரியாகக் குறி பார்த்து அந்த எலியைச் சுட்டான். வைர வியாபாரி சந்தோஷமாக அந்த எலியின் வயிற்றைக் கிழித்து வைரத்தை எடுத்துக் கொண்டான்.

**அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
சிரேஷ்ட விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை.



ஆனால் ஒரு கேள்வியை எலி பிடிப்பவனைப்பார்த்து வைர வியாபாரி கேட்டான். "ஆமா, அந்த எலி மாத்திரம் மற்ற எலிகளோடு சேராமல் தனியே தனித்தே இருந்ததே! நீயும் அதைச் சரியாக அடையாளம் கண்டு சுட்டுவிட்டாய் எப்படி?" என்று கேட்டார். அந்த எலி பிடிப்பவன் பதில் சொன்னான்: "இப்படித்தான் பலபேர் திடீர் பணக்காரர்கள் ஆனதும் மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் கொண்டு மற்றவர்களுடன் அவர்கள் சேராமல் தனியே இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்வார்கள்'' அதுவே, ஆபத்தில் அவர்களுக்கு உதவாமல் போய்விடுகிறது என்றான். உறவுகளும் அப்படித்தான் சிலர் இடையில் வந்து அழிந்து போகும் செல்வத்தை நம்பிக் கிடைத்த உறவுகளை அசட்டை செய்து விட்டு விடுகிறார்கள். ஆயினும் கோடி செல்வம் இருந்தாலும் சொந்த பந்தமும், நல்ல நட்புமுமே கடைசி வரையில் நம்முடன் இருக்கும்.

இக்கதை சொல்ல வருகின்ற நீதியானது செல்வத்தால், பணத்தால் மாத்திரம் வாழ்வு வந்துவிடாது. அதற்கு மேலாக, நாம் இவ்வுலக வாழ்க்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு செல்கின்றபோது எதனையும் இவ்வுலகிலிருந்து எடுத்துச் செல்வதுமில்லை. அதனையே "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன், அங்கே திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன்" என்கிறது திருவிவிலிய யோபு நூல் (யோபு 1:21). பட்டினத்தார் சித்தர் அதனை "பிறக்கும்போது கொண்டு வருவதில்லை பிறந்த மண்மேல் இறக்கும்பொழுது கொண்டு போவதில்லை" என்கிறார். எனவே ஒன்று மட்டும் திண்ணம். வாழ்வில் எதுவும் நமக்கு சொந்தமானது கிடையாது. உள்ளவரை பயன்படுத்த முடியும் அவ்வளவுதான்.

அப்படிப்பட்ட வாழ்வினை எவ்வளவு அவதானமாகவும், கவனமாகவும் மனிதர்களாகிய நாம் கையாள வேண்டும். உலக செல்வத்தினைக் குறித்து இயேசுகிறிஸ்துவின் போதனையாக நமக்கு கற்பிக்கப்படுவது யாதெனில் "மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும், திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால், விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள், அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை, திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை" (மத்தேயு 6:19-20). நமது செல்வம் இந்த உலகத்தோடு மட்டும் மட்டுப் பட்டதாக மட்டும் இருக்க முடியாது. அது இந்த உலக வாழ்வினைக் கடந்த விண்ணக வாழ்வினை நோக்கியதாக இருக்க வேண்டுமென்பதில் இயேசுகிறிஸ்து தெளிவாக உள்ளார். இதனை இன்னுமொரு வழியில் நோக்குங்கால் தமிழ் நல்வழிப் பாடலொன்று பின்வருமாறு இடித்துரைக்கின்றது. "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்: கூடுவிட்டு இங்கு ஆவிதான் போயினபின் யாரே அனுப விப்பார் பாவிகாள் அந்தப் பணம்." உடலை விட்டு உயிர் பிரிந்த பிற்பாடு தேடிப் புதைத்த பணத்தை (செல்வத்தை) யார்தான் அனுபவிப்பார்?

உலக வாழ்வினைக் கொண்டு செல்ல சொத்து, பணம், செல்வம் தேவையென்பது ஏதோ உண்மைதான். ஆனால், அதுதான் வாழ்வு கிடையாது. நாம் தேடிய சொத்து, செல்வம் நமது கண்களை மறைக்கக்கூடாது. நீதிமொழிகள் நூல் சொல்கிறது "செல்வம் எப்போதும் நிலைத்திராது, சொத்துத் தலைமுறை தலைமுறையாக நீடித்திருப்பதில்லை" (நீமொ. 27:24). எனவே அழியக் கூடிய உலகின் செல்வத்தினைக் குறித்த வாழ்வில் தெளிவாக இருக்கக் கற்றுக்கொள்வோம். பொருட்களை அடுக்கிக்கொண்டு செல்வதனால் வாழ்வு வந்துவிடாது. ஆங்கிலத்தில் என்னைக் கவர்ந்த சொற்றொடர்களுள் ஒன்று "Less luggage more comfort" குறைந்த பொருட்கள் நிறைந்த மகிழ்ச்சி என்பதாகும். எவ்வளவிற்கு உலக ஆதாயத்தைத் தவிர்த்துக் கொள்கின்றோமோ அவ்வள விற்குத்தான் ஆன்மீக ஆதாயத்தை தேடிக்கொள்ள முடியும். எனவே உலக வாழ்வுப் பயணத்தில் பயணிக்கும் நாம், உலக மாந்தருடன், அதிலும் குறிப்பாக நமது வீடுகளில், அயலில் உள்ளவர்களுடன் நல் நட்பினைப் பேணுவோம். பொருட்களுக்கு மேலாக மானிடத்தைப் பேணுவோம்.

"மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?" என்கின்ற மத்தேயு 16:26 வார்த்தை உலக வாழ்விற்கு அப்பாலும் ஓர் வாழ்வுண்டு என்பதனைக் கற்பிக்கின்றது. அதற்காக நம்மைத் தயாரிக்க வேண்டுமெனவும் அழைப்பு விடுக்கின்றது. வாழ்வு உலகோடு முடிந்துவிடும் என்று வாழ்ந்தால் செல்வச் செருக்கினால் அழிவது திண்ணம். உலக வாழ்விற்கு பின்னாலும் வாழ்வுண்டு என்று நம்புகின்றவர்களுக்கு உலக வாழ்வு நல்வாழ்வுக்கான பயிற்சிப் பட்டறையாகும். நல்வாழ்வினை கரம்பற்றிப் பிடிக்க உலக வாழ்வினை உத்தம தனத்தில் செலவிடுவோம். வெற்றி வாகையினை சூடிக்கொள்வோம். ■

**குணமாய் வாழ்வோம்...**


**கோபத்தை விழுங்கி விடுங்கள். மன்னித்து மகிழுங்கள். "மன்னிக்கவே மாட்டேன், செத்தாலும் மறக்க மாட்டேன்" என்றெல்லாம் வீர வசனம் பேசினால் மனம் பாறையாய் இறுகிப் போகும். மன்னித்துப் பாருங்கள். மனது இலவம் பஞ்சாகிவிடும்.**



**எப்போதும் ஒரு புன்னகையை இதழோரத்தில் வைத்திருங்கள். சந்திக்கும் பொழுதுகளில் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் புன்னகையைப் பரிசாக வழங்குங்கள். பாசம் பெருகும். முகமும் பொலிவு பெறும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுதான்டா அரசியல்

## ஓ! ஜெருசலேமே!

**கடந்த இதழ் தொடர்ச்சி ....**

**1703** முதல் 1705 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஜெருசலேமின் முஸ்லிம் தலைமைத்துவமும், மக்களும் ஒட்டோமானின் மாவட்ட ஆளுநர் மெஹ்மட் பாஷா குர்து-பயிராமுக்கெதிராக கிளர்ச்சி செய்தார்கள். நஜீப் அல்-அஷ்ரப் கிளர்ச்சி என அறியப்படும் அந்தக் கிளர்ச்சியின்போது ஜெருசலேம் வாசிகள் ஒட்டோமானின் மத்திய அதிகாரபீடம் மீண்டும் தனது கட்டுப்பாட்டை, ஆட்சியதிகாரத்தை, அந்நகரத்தில் நிலை நிறுத்தும் வரையில், அநேகமாக சுயாட்சி நிலையில் தங்கள் தேவைகளை, நிருவாகத்தைத் தாங்களே கவனித்துக் கொண்டார்கள்.

நவீன காலம்

ஒட்டோமான் சாம்ராஜ்ய வீழ்ச்சி

19ஆம் நூற்றாண்டு மத்தியில் ஒட்டோமான் சாம்ராஜ்யம் வீழ்ச்சியடையத் தொடங்கியபோது சுமார் 8,000 மக்கள் தொகையைக் கொண்ட ஜெருசலேம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. இருந்தபோதும் அங்கு இருந்த யூதம், கிறிஸ்தவம், இஸ்லாமியம் ஆகியவற்றைப் பின்பற்றும் மக்களால் அது பன்முகத் தன்மை கொண்டதாக மிளிர்ந்தது. மக்கள் தொகை நான்கு மதங்களைப் பின்பற்றகின்ற மக்களின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாக அறியப்பட்டனர். அவர்கள் யூதர்கள். கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும் ஆர்மேனியர்கள் ஆவர். இதில் முதல் மூன்று வகையினரும் குறிப்பாக தமது மதம், தமது மூல நாடு என்கின்ற வகையில் இன்னும் பல குழுக்களாக அறியப்படலாயினர். தூய கல்லறைக் கோயிலானது கிரேக்க, ஓத்தொடக்ஸ், கத்தோலிக்க, ஆர்மேனிய, கொப்டிக், எத்தியோப்பிய திருச்சபைகள் மத்தியில் கவனமாகப் பிரித்துக் கொள்ளப்பட்டது. இந்தக் குழுக்களிடையே பிரச்சினைகள் உச்சத்தில் இருந்த காரணத்தினால் நடுநிலையாளர்களான ஒரு சோடி முஸ்லிம் குடும்பங்களைக் கொண்டு புனிதத் தலங்களும், அவற்றின் நுழை வாயில்களும் காவல் காக்கப்பட்டன.

அந்த நேரம் இந்த சமூகங்கள் முக்கிய புனிதத் தலங்களைச் சுற்றி அமைந்திருந்தன. முஸ்லிம் சமூகமோ தேவாலய மலை (ஹரம் அஷ்-ஷரிப்) வடகிழக்குத் திசையிலும், கிறிஸ்தவர்கள் தூய கல்லறைக் கோயிலைச் சுற்றிலும் (வடமேற்குத் திசையில்), யூதர்கள் பெரும்பாலும் மேற்குச் சுவரின் பக்கமாக உள்ள மலையின் ஏற்றமான பகுதிகளிலும் (தென்கிழக்குத் திசை), ஆர்மேனியர்கள் சீயோன் நுழைவாயிலுக்கருகாமையிலும் (தென்மேற்காக) வசித்து வந்தனர். எவ்வாறாயினும் இந்த இடப் பிரிப்பு முடிவானதாக இருக்கவில்லை. இருந்தும் பிரிட்டிஷாரால் முன்வைக்கப்பட்ட தீர்வின்படிக்கு (1947 – 1948) நான்கு இடப் பரப்பினதும் அடிப்படையாக இதுவே அமைந்திருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் நிரந்தரமான முடிவாக அமையக் கூடியதாக சில மாற்றங்கள் இதில் நிகழவே செய்தன. அவற்றின் தாக்கம் ஜெருசலேம் தொடர்பான பாலஸ்தீனம்- இஸ்ரேல் மோதல்களின் அடிப்படையாக இன்றும் உணரப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதில் முதலாவது மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து யூத குடியேற்ற வாசிகள் சிறுகச் சிறுக வந்தமையாகும். இவர்களில் முதன்மையானவர்கள் ஓத்தொடக்ஸ் யூதர்களாகும். இவர்களில் சில தனிப்பட்ட வயதானவர்கள் தாம் ஜெருசலேமில் மரித்து ஒலிவ மலையில் புதைக்கப்பட வேண்டும் என்கின்ற வேணவாவுடன் வந்திருந்தார்கள், இன்னும் சிலர் மாணவர்கள். இவர்கள் மெஸியாவின் வருகைக்காகக் காத்திருக்கவென்று தங்கள் குடும்பத்தாருடன் வந்திருந்தார்கள். இவர்களால் உள் நாட்டு மக்கள் மத்தியில் புதுவேகம் பிறந்தது. இதே சமயம் ஐரோப்பிய குடியேற்ற நாடுகள் ஜெருசலேமில் ஏதாவது ஒரு வகையில் காலூன்ற வழி பார்த்துக் கொண்டேயிருந்தன. அவை நடைபெறவிருக்கும் ஒட்டோமான் சாம்ராஜ்ய வீழ்ச்சியைப் பயன்படுத்தி தம் செல்வாக்கைப் அதிகரித்துக் கொள்ளக் காத்துக் கொண்டிருந்தன.


அது கிறிஸ்தவ புதுப்பித்தல் கால கட்டத்திற்குரிய வேளையாகவும் இருந்தது. பல திருச்சபைகள் கிறிஸ்துவின் மறுவருகை வேகப்படுத்தப்படலாம் என்கின்ற நம்பிக்கையோடு முஸ்லிம்களையும், யூதர்களையும் மனந்திரும்பப் பண்ணவென்று மறைபரப்புக்காக ஆளணியை அனுப்பி வைத்தார்கள். இறுதியாக, ஐரோப்பிய குடியேற்ற வாதமும், சமயப் பற்றுதலும் இணைந்து விவிலிய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பொதுவாகவும், ஜெருசலேமைக் குறிப்பாகவும் கொண்ட ஆய்வு செய்ய ஒரு விஞ்ஞான ரீதியான ஏற்பாட்டை அறிமுகம் செய்து வைத்தன. புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகள் ஆச்சரியத்தைக் கொடுத்ததோடு மட்டுமல்லாது, ஜெருசலேம் மீதான அக்கறையையும் அதிகரிக்கப்பண்ணின.

1860 இல் ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள அந்நகரத்தின் குடிப்பரம்பல் நெருக்கமாகியது. இதனால் ஜெருசலேம் மதில்களுக்கப்பால் இருந்த நகரத்தின் பகுதியில் புதிய நகர நிர்மாணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. தமது உரிமையை நிலைநாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அக்கினி யாத்திரை








சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சினால் நாடு தழுவிய ரீதியில் நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் கல்முனை திரு இருதயநாதர் பங்கு சாதனை படைத்துள்ளது. பங்குத் தந்தை அருட்பணி ஏ. ஜேசுதாஸின் வழிகாட்டலில் இரண்டு நாடகங்கள் போட்டியில் பங்கு பற்றின. அதில் பைந்தமிழ்க் குமரன் டேவிட் எழுதி நெறியாள்கை, ஒப்பனை, அரங்க நிர்மாணிப்பு செய்த "அக்கினி யாத்திரை" நாடகம் முதலாம் இடம் பெற்றுச் சாதனை படைத்தது. இது சிறந்த நாடகப் பிரதி, சிறந்த நடிகை, சிறந்த இசையமைப்பு, சிறந்த குழந்தை நட்சத்திரம் போன்ற விசேட விருதுகளையும் பெற்றது. மற்றைய நாடகமான "எங்கட பாதர்" நாடகம் சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகை விருதுகளைச் சுவீகரித்துக் கொண்டது. சிறப்பாக வழிப்படுத்தி பங்களிப்புச் செய்தமைக்காக அருட்தந்தை ஏ. ஜேசுதாஸன் அடிகளாரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இதன் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு டவர் அரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த இரு நாடகங்களையும் பங்கு மக்களுக்காகக் கடந்த 30.09.2018 அன்று மாலை 6.00 மணிக்கு கல்முனைப் பிரதேச செயலாளர் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, கல்விமான்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், அருட்சகோதரிகள் பொதுமக்கள் என மண்டபம் நிரம்பிய நிலையில் நாடகங்கள் மேடையேற்றப்பட்டதுடன் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். "தொண்டன்" மற்றும் சமூகத் தொடர்பு நிலைய இயக்குநர் அருட்பணி R. பயஸ் பிரசன்னா அடிகளார், கலாநிதி சத்தார் எம். பிர்தவுஸ், பிரதேசச் செயலாளர் என்போர் சிறப்புரையாற்றினர். பங்குத்தந்தை தலைமையுரையுடன் வரவேற்புரையும் நிகழ்த்தினார்.

புதிய இடங்களைத் தேடிய ரஷ்ய ஓர்த்தொடக்ஸ் திருச்சபை இன்று ரஷ்ய வளவு என அறியப்படும் கட்டிடத் தொகுதி ஒன்றை நிருமானித்தது. இது ஜாபா நுழைவாயிலிலிருந்து ஒரு சில நூறு மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ளது. மதிலுக்குமப்பால் முதல் தொகுதி வசிப்பிடப் பணிகளைத் தொடங்கியது யூத சமுதாயம்தான். ஹின்னொம் பள்ளத் தாக்கின் குறுக்காக சீயோன் நுழைவாயிலுக்கருகில் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. மிஷ்கினொட் ஷன்னானிம் என்றழைக்கப்பட்ட இந்த குடியேற்றம் மற்றைய சமூகங்களும் பழைய நகரத்தின் மேற்காகவும், வடக்காகவும் புதுப்புது குடி யேற்றங்கள் முளைத்துக் கிளம்பி தழைத்தோங்க வழி செய்தது. காலப்போக்கில் இந்தச் சமூகங்கள் பலுகிப் பெருகி புவியியல் ரீதியாக ஒன்றிணைந்ததையடுத்து அப்பகுதி புதிய நகரம் என்று அழைக்கப்படலாயிற்று.

1882 இலே யேமனிலிருந்து சுமார் 150 யூதக் குடும்பங்கள் ஜெருசலேமுக்கு வந்து சேர்ந்தன. ஆரம்பத்தில் இவர்களை அங்கிருந்த யூதர்கள் ஆதரிக்கவேயில்லை. மிகவும் பரிதாபகரமான நிலையில் வாழ்ந்த அவர்களை ஆதரித்தது என்னவோ சுவிடிஸ் – அமெரிக்கன் கிறிஸ்தவ அமைப்பினரான 'கடைட்டு'க்கள்தான். 1884 இல் யேமனியர்கள் சில்வான் என்கின்ற இடத்தில் குடியமர்ந்தார்கள்.

**பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலப் பகுதி**

1917 டிசெம்பர் மாதம் 09 ந் திகதி ஓட்டோமான்கள் பிரிட்டிஷாரிடம் சரணடைந்தனர். மத்திய கிழக்கில் முதலாம் உலக மகா யுத்தத்தின்போது ஓட்டோமான்கள் பிரிட்டிஷாரிடம் தோற்ற பின்னர், பிரிட்டனுக்கு பெரும் வெற்றியாக அது அமைந்ததுடன் பாலஸ்தீனத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்த வழி கிடைத்தது. முதலில் அங்கிருந்திருக்கக் கூடிய ஓட்டோமான் சாம்ராஜ்யத்தை களையெடுக்க வேண்டிய பணி தொடங்கப்பட்டது.



**20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் ஜெருசலேம் இப்படித்தான் இருந்தது.**

1917 டிசெம்பர் மாதம் 11 ந் திகதி எகிப்து பிராந்திய படைச் செயலணியின் கட்டளைத் தளபதி எட்வர்ட் அலென்பி பிரபுவின் தலைமையில் புனித நகரத்திற்கு மதிப்புக் கொடுக்கும் விதத்தில் வெறுங்கால்களுடன் நடந்து ஜெருசலேமுக்குள் அவரது படைகள் நுழைந்தன.

– தொடரும்....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மகிழ்ச்சி என்பது வசதிகளில் இல்லை!



- ஜே.எச்.இரத்தினராஜா

அந்த சிறு குருவிக்கு அன்று ஓர் அழகிய கனவு வந்தது. கனவில் மிக அழகான ஓர் உலகம் தெரிந்தது. இதுவரை குருவி அப்படியொரு அற்புத உலகத்தைப் பார்த்ததில்லை. வண்ண வண்ண விளக்குகள், அழகான நதிகள், மரங்கள். எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சியென்று அந்த அற்புத உலகம் மயக்கியது. எப்படியாவது அந்த உலகத்திற்குப்போயே ஆகவேண்டுமென்று அந்தக் குருவி விரும்பியது. ஆனால், போகும்வழிதான் அதற்குத் தெரியவில்லை. அது பறந்து செல்லும் போது ஒரு பிரபல சோதிடரைப் பார்த்தது. காலத்தையெல் லாம் கணிக்கும் சோதிடருக்கு அந்த அற்புத உலகத்திற்குச் செல்லும் வழி தெரியாதா என்ன? அவரிடம் குருவி வழி கேட்டது. "எனக்கு முழு விபரம் தெரியாது. இருப்பினும் தெரிந்தவரை சொல்கிறேன். அதற்கு விலையாக நீ உன் இறகுகளில் ஒன்றைத்தர வேண்டும்" என்றார் சோதிடர். ஒரேயொரு இறகுதானே என்று குருவியும் சரி என்றது. குருவி அவர் சொன்ன வழியில் பறந்து சென்றது. குறிப்பிட்ட இடத்திற்குமேல் அது வழி தெரியாமல் திகைத்து நின்றது. அப்போது அந்த வழியே ஒரு பாம்பு வந்தது. பாம்பிடம் குருவி தன் கனவு பற்றிச் சொல்லி, "அந்த உலகத்தின் சந்தோசங்களை அனுபவிக்க நான் அங்கே போகிறேன், எனக்கு வழியைக் காட்டேன்" என்றது. "பாம்பு இங்கிருந்து அந்தப் பகுதிக்குச் செல்லும் வழி ஓரளவுக்குத்தான் எனக்குத் தெரியும் சொல்கிறேன், பதிலுக்கு எனக்கு நீ என்ன தருவாய். உன் அழகான இறகுகளில் ஒன்றைத் தந்துவிடு'' என்றது. இன்னொரு இறகுதானே தந்தால் போச்சு என்று குருவியும் சம்மதித்தது. பாம்பு சொன்ன பாதையில் குருவி பயணிக்க அதுவும் ஓரளவுக்குத்தான் போகமுடிந்தது அதற்குப்பிறகு வழி தெரியவில்லை. இப்படியே அந்தக்குருவி ஆங்காங்கே இருந்த சிலரிடம் வழி கேட்டுக்கேட்டு பறந்தது. அவர்களும் வழி சொல்லிவிட்டு குருவியிடம் இருந்து ஒரு இறகை விலையாகக் கேட்டார்கள். குருவியும் அந்த அற்புத உலகின் சந்தோசஷங்களை அனுபவிக்கப்போகும் ஆசையில் வழி சொன்னவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு இறகாக பிய்த்துக் கொடுத்தபடி சென்றது. முடிவாக அதோ கனவில் கண்ட அந்த அழகான உலகம் அதன் கண்முன் தெரிந்தது. வந்து விட்டோம், வந்தே விட்டோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கை கோர்த்திடும் கார்த்திகை

திருமதி. ரீ. ஐ. கைடி பொன்கலன்

கார்த்திகையின் கணப்பொழுதும் வீணாக்காமல் – குளிரில்
போர்த்திய போர்வைதனை களைந்துவிட்டே
நேர்த்தியாய் நிறையப் பெருக்க பணிவிடைகளை
பூர்த்தி செய்யப் புறப்படும் மனிதர்களே!
வார்த்தைகளால் வடிக்க முடியாத துயரங்களை – கை
கோர்த்தே புலம்பிடுவீர் இன்றைய நாளிலே!

நேயம் நிரம்பப்பெற்ற மக்களெல்லோரும் – ஆன்ம
காயம்பட்ட உடல்களையெல்லாம் புதைத்த பின்பு
மாயமாய் மறைந்துவிட்ட தமது உறவுகளுடன்
சாயம்போன சான்றுகளாய் வாழ்க்கைதனை
தூயதாய் வாழவேண்டுமென எண்ணியே இறைவனிடம் – இனி
நீயே வாழும்வரை வரம் தருவாயென வாழ்வதே இந்நாள்!

காலமுள்ளவரை கனப்படுத்தாத உறவுகளைக்கூட
ஞாலத்திலிருந்து தம்மை விட்டகன்ற போதுதான் தமது
கோலத்தில் பிரிந்தவர்களின் பிடிப்பைத் தேடி
ஆலத்தைவிட அதிக ஆபத்துள்ளதைக் கூட – தெய்வ
சூலங்கொண்டு தகர்த்தே தன்னிலை மறந்து – வர்ண
ஜாலமாய் வாழ்க்கையை வழிபடுகின்றனரே இந்நாளிலே!

மானிலத்தில் மாண்டவர்க்கெல்லாம் ஓர் நாளிதே,
நானிலத்து மாந்தரும் ஒன்று கூடி இந்நாளிலே,
வானுலகில் வாழும் தம் உறவுகளையெண்ணி – இம்
மண்ணுலகில் தத்தமது வசதிக்கேற்ப அனைவரும்
கண்ணியம் காத்திட கல்லறைதனை நாடியே
புண்ணியம் செய்திட்டோரை வாழ்த்துவோமே இந்நாளிலே!

இன்னும் சில நூறடி தூரம் பறந்தால் அந்த அற்புத உலகம். குருவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஆனால், இது என்ன, ஏன் என்னால் பறக்க முடியவில்லை. ஐயோ என் உடம்பெல்லாம் கனக்கிறதே. கீழே இருந்து காற்றில் எழும்பவே முடியவில்லையே என்று கதறியது. மெல்ல மெல்ல குருவிக்குப் புரிந்தது. பறப்பதற்கான இறகுகள் தன்னிடம் இப்போது இல்லையென்ற உண்மை விளங்கியது. குருவியால் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளவே முடிய வில்லை. இதோ கண் முன்னே தான் கனவில் கண்ட அற்புத உலகம். ஆனால், அதை அனுபவிக்கவே முடியாமல் கீழே கிடக்கிறேன். அந்த சோகமும், ஏக்கமும் தாங்க முடியாமல் எட்டாத உயரத்தில் தெரியும் அந்த மாய உலகின் வாசலைப் பார்த்தபடியே பரிதவித்துக் கொண்டிருந்தது அந்தக் குருவி.

இன்று நம்மில் பலரது நிலைமையை குறிப்பிடும் அற்புதக்கதை இது. நவீன வசதிகளே சந்தோசம் என்று அந்த மாய உலகின் வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக இன்றைய நம் சந்தோசங்களை இழந்து கொண்டிருக்கிறோம். குடும்பத்துடன் வெளியே செல்வது, பிள்ளைகளோடு மனம் விட்டுப் பேசுவது, பிடித்த புத்தகம் படிப்பது, பிடித்த படம் பார்ப்பது, பிடித்த கோவிலுக்குப் போவது, பிடித்த உடை உடுத்துவது, பிடித்த உணவு உண்பது என்று எல்லா சந்தோச இறகுகளையும் ஒவ்வொன்றாக வீசுகின்றோம். கடைசியில் அந்த வசதிகளை அனுபவிக்கும் ஒரு நிலை வரும்போது நரை கூடி திரை வந்து உடலும், மனமும் தளர்ந்து போகின்றது. எல்லாம் இருந்தும் அனுபவிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. மகிழ்ச்சி என்பது வசதிகளில் இல்லை. நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலுமே இருக்கிறது. இதனை உணர்ந்தவர்களாக இனியாவது மகிழ்ச்சியாக வாழ முயல்வோம்.

ஆடி அடங்கும் வாழ்க்கை ஆறடி நிலமதில் சங்கமம்
ஆடிப்பாடி வாழும் சுயநலம் ஓர்நாள் வீழும்
ஆவன செய்திடு நல்லவனாய் வாழ்ந்திடு
ஆண்டவன் பதம் சேர்வது நிச்சயம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தந்தை இறந்த பின் தன் தாயைக் கவனிக்க முடியாமல் முதியவர் இல்லத்தில் சேர்த்து விட்டான் மகன். மனைவியும் வேலைக்குப் போவதால் தன் தாயை வீட்டில் கவனிக்க யாருமில்லை என்ற காரணத்திற்காக முதியவர் இல்லத்தில் சேர்த்து விட்டான். மாதத்திற்கு ஒரு முறை தன் தாயை அங்கு சென்று சந்தித்து வந்தான்.

வருடங்கள் கடந்தன.

ஒருநாள் அவருடைய தாய் மிகவும் முடியாமல் இருப்பதாகத் தகவல் வந்தது. மகனும் உடனடியாகத் தன் தாயைச் சந்திக்கச் சென்றான். தாய் சாகும் தருவாயில் இருந்தார்.

"உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?" என மகன் கேட்டான்.

"இந்த முதியவர் இல்லத்தில் மின் விசிறிகள் எதுவும் இல்லை. காற்று இல்லாமலும், கொசு கடித்தும் நிறைய நாட்கள் தூங்காமல் இருந்திருக்கிறேன். இங்கு தரும் கெட்டுப் போன சாப்பாட்டைச் சாப்பிட முடியாமல் பல நாட்கள் சாப்பிடாமல் தூங்கியிருக்கிறேன். எனவே இந்த இல்லத்திற்கு சில மின் விசிறிகளும், சாப்பாட்டைக் கெடாமல் பாதுகாத்து வைத்திருக்க ஒரு குளிர்சாதனப் பெட்டியும் வாங்கிக்கொடுப்பாயா?" என மெல்லிய குரலில் தாய் கேட்டார்.

மகன் ஆச்சரியப்பட்டான்.

"பல வருடங்களாக நான் உங்களைப் பார்க்க வருகிறேன். ஒருநாள் கூட இப்படி ஒரு குறையைச் சொல்லவில்லை. இப்போது மட்டும் ஏன் இதை கேட்கிறீர்கள்?" எனக் கேட்ட மகனின் முகத்தை மெல்ல ஏறெடுத்துப் பார்த்தார்.

"மகனே இங்கு மின் விசிறி இல்லாமல் கொசுக்கடியை தாங்கிக் கொண்டு உறங்குவதற்கு நான் பழகிக்கொண்டேன். இங்குள்ள பசியையும், துன்பங்களையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால், உனது குழந்தைகள் உன்னை இந்த இல்லத்திற்கு அனுப்பும்போது உன்னால் அவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாது என நினைத்து வருந்துகிறேன். அதனால் தான் இப்போது கேட்கிறேன்" என்றார்.

**வாழ்க்கையில் காயப்படுத்தும் விஷயங்களே கற்றுக் கொடுக்கவும் செய்கின்றன...**

# உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?

நன்றி : இணையம்







சமயத்தில் தோசை நன்றாக தோசைக் கல்லுடன் தாச்சியுடன் ஒட்டிக் கொள்ளும்.

## குறிப்புகள்

அவ்வேளையில் ஒரு பெரிய வெங்காயத்தை பாதியாக வெட்டி தோசைக் கல்லில் தேய்த்துவிட்டு தோசை ஊற்றினால் நன்றாக வரும்.



**வா**டிய கரட், பீட்ரூட்டை உப்பு கலந்த நீரில் சிறிது நேரம் போட்டு எடுத்தால் புதிதாய் வாங்கியது போல் ஆகிவிடும்.



**வா**ழைப்பழம் நிறம் மாறாமல் இருக்க மெல்லிய துணியில் சுற்றி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்ரனும் நண்பர்களும் உணவு வேளையில் உரையாடிக்கொண்டிருந்தனர். தனிகாசலம் அன்ரனிடம் கேட்டார்,

"மச்சான், அந்த முதலாளிக்கு எப்ப டொக்டர் பட்டம் கிடைச்சது...? அவன எனக்கு நல்லாத் தெரியும். அவன் ஏழாம் வகுப்புவரைதான் படிச்சவன். இப்ப 'கலாநிதி' என்று பேருக்கு முன்னால போடுறான்? எப்படியப்பா இது சாத்தியம்...?"

"முதற்பட்டம் எடுத்து, முதுமாணிப் பட்டம் முடிச்சு, பிறகு எம்பில் படிச்ச பிறகு ஆராய்ச்சியெல்லாம் செஞ்சாத்தான் கலாநிதிப் பட்டம் எடுக்கலாம்.... முதலாளி இதெல்லாம் படிச்சவரா....?"

என்று அன்ரன் வினவினார். உடனே இப்ராகிம் சொன்னார்,

"இல்ல அன்ரன் .... வெளிநாட்டுக்கு ஆக்கள அனுப்புற ஏஜென்டுகளப் போல கௌரவ கலாநிதிப் பட்டம் குடுக்கிற ஏஜண்டுகளும் இருக்காக. ஒரு லட்சம் கொடுத்தா 'டொக்டர்' பட்டம்; ஒன்னர லட்சம் கொடுத்தா பேராசிரியர் பட்டம்...."

"என்ட முருகா.... இது என்ன அநியாயம்...."

என்று தலையிலடித்தார் தணிகாசலம்.

"நம்மட புள்ளங்க கேள்விப்பட்டா படிக்கவே மாட்டானுக.... லட்சம் தா எண்டு கேட்டு கலாநிதிப் பட்டம் வாங்கிடுவானுக...." என்றார் இப்ராகிம்.

"நோ... நோ ... இந்தப் பட்டம் வெறும் பேப்பர் பட்டந்தான். நடப்பாச் சொல்ல மட்டும்தான்.... வெறும் கௌரவப் பட்டம்-தான்" என்றார் செலர்.

"வரட்டுக் கௌரவக்காரங்க...."

என்று தணிகாசலம் சொன்னார்.




## வெளிவேடம் என்ற புளிப்பு மாவு உருவாக்கும் ஆபத்து...

பரிசேயரின் வெளிவேடம் என்ற புளிப்பு மாவைப் பெற்றவர்கள், தாங்கள் செய்யும் நற்செயல்கள் அனைத்தையும், எக்காளம் ஒலித்து அறிவிப்பர். உள்ளூர அவர்களிடம் உண்மையான அன்போ, பாசமோ வளராது. பரிசேயரின் வெளிவேடமாகிய 'புளிப்பு மாவை' நிராகரித்து, 'தூய ஆவியார்' என்ற 'புளிப்பு மாவை' ஏற்று வாழவேண்டும்.

தூய ஆவியார் என்ற புளிப்பு மாவைப் பெற்றுக்கொள்வோர், மீட்பும், உரிமைப் பேறும் பெறுவர் என்று திருத்தூதர் பவுல் கூறியுள்ளதையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

## அருள்பணியாளர்கள், "சூப்பர்" நாயகர்கள் அல்ல - திருத்தந்தை.....



அருள்பணியாளராக அழைக்கப்பட்டவர்கள், "சூப்பர்" நாயகர்களாகச் செயலாற்ற அல்ல மாறாக, காயமுற்று, இறந்து உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டுள்ளனர். அருள்பணியாளர்களின் வாழ்வில் வெளிப்படும் மகிழ்வு, வறியோர், மற்றும், சிறியோர் மட்டில் அவர்கள் காட்டும் அக்கறை ஆகியவை வழியே, அவர்கள் கிறிஸ்துவின் சீடர்கள் என்ற பணியை திறம்பட ஆற்றமுடியும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறைமாவட்ட அருள்பணியாளர்களிடம் எடுத்துரைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- ஆழியோன் -

# இலக்கிய மஞ்சரி

நவம்பர் மாதம் என்றால் சகல புனிதர்கள் தினம், மரித்த ஆத்துமாக்கள் திருநாள் என்று கத்தோலிக்கர்கட்கு தொடங்கி, பின்னர் இந்துக்களுக்கு தீபாவளி, இஸ்லாமியர்கட்கு நபிகளின் பிறப்பு நாள் என்று பல நிகழ்வுகள் காணப்படும்.

மரித்தோர் திருநாளில், கல்லறைகளைச் சுத்தப் படுத்தி, மாலைகள் போட்டு, மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி, பூசையில் பெயர் வாசித்து, எல்லாம் முடிந்து விடும். மீண்டும் அடுத்த ஆண்டுதான் இது நினைவுக்கு வரும்.

இறந்தவர் உயிருடன் இருந்தபோது அவர்களை நாம் அன்பு செய்தோமா....? அரவணைத்தோமா.....? என்று நம்மை நாமே சுயபரிசோதனை செய்ததுண்டோ....?

வயோதிபப் பெற்றோர்களை நாம் பராமரித்த துண்டோ....? அவர்கள், எம்மைக் குழந்தைப் பராயத்தில் இருந்தே பராமரித்து, உணவூட்டி, ஆடைதந்து, கல்வி தந்து வந்ததை நாம் மறந்துவிட்டோமா....? என்றெல்லாம் சிந்தித்தால் நாட்டில் வயோதிபர் இல்லங்கள் நமக்குத் தேவையில்லை.

அன்னை திரேசா வாழ்ந்த இந்திய நாட்டில் பெரு நகரமொன்றில் வயோதிபர் இல்லம் ஒன்றிருந்தது. அதில் அனாதைகளாக்கப்பட்ட, ஆதரவற்ற வயோதிபர் கள் அரவணைக்கப்பட்டனர். ஆனால், சில மாதங்களுக்கு முன்னர் அங்கிருந்து தப்பிவந்த ஒரு வயோதிபர் சொன்ன செய்தியைத் தொடர்ந்து பொலிஸார் அவ்வில்லத்தைச் சுற்றி வளைத்தனர். விசாரணையின் போது பல திடுக்கிடும் விடயங்கள் வெளிவந்தன. அங்கிருந்த வயோதிபர்கள் உணவு கொடுக்கப்படாமல் பட்டினி போடப்பட்டு படிப்படியாகக் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் சடலங்கள் நிலக்கீழ் கல்லறையில் வைக்கப்பட்டிருந்தன. துளைகள் இடப்பட்ட, இலாச்சிகள் போன்ற தட்டுகளில் உடலங்கள் வைக்கப்பட்டதனால் உடல்நீர் எல்லாம் கீழே வடிந்து சில காலங்களில் எலும்புக்கூடுகள் மட்டும் எஞ்சியிருக்கின்றன.

இவ்வெலும்புக்கூடுகள் மருத்துவக் கல்லூரிகட்கும், வெளிநாடுகளுக்கும் விற்கப்பட்டிருந்ததாகவும், பொலிஸார் சென்றபோது நூற்றுக்கும் மேற்பட்ட எலும்புக்கூட்டு பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், பத்திரிகைச் செய்தியொன்று சொல்லியிருந்தது.

வியாபாரங்கள் எப்படியெல்லாம் பயங்கரமாகி விட்டன.

இது தவிர, நம் நாட்டில் வெண்சுருட்டுப் பழக்கம், மதுபாவினைப் பழக்கம் என்பன இளையோரைத் தீட்டுப் படுத்திக்கொண்டிருந்தன. நாமே "லைசன்ஸ்" கொடுத்து விற்கச் சொல்லிவிட்டு, 'சிகரட் குடிக்காதே!', 'சாராயம் குடிக்காதே' என்று கூப்பாடு போடுகின்றோம். இது என்ன நியாயம் ஐயா....? 'வில்' என்றும் சொல்கின்றோம், 'வாங்காதே' என்றும் சொல்கின்றோம்.

இதனையெல்லாம் மீறி 'குடு' வியாபாரம், 'கஞ்சா' வியாபாரம் கொடிகட்டிப் பறக்கின்றது என்றுதான் பத்திரிகைகள் சொல்கின்றன. விமான நிலையத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவு வரை வாழ்வை மற்றவர்களுக்கு அர்ப்பணிக்க...

புனிதத்துவமும், நற்செயல்களைச் செயல்படுத்துவதும் ஒரு சிலருக்கோ, ஒரு சில நேரங்களுக்கோ மட்டும் உரியதல்ல, மாறாக, எல்லா வேளைகளிலும், எல்லாராலும் கடைப்பிடிக்கப் பட வேண்டிய கடமை அது, என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாவு வரை நம் வாழ்வை மற்றவர்களுக்காக அர்ப்பணம் செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

**இறைவனை நினைவு கூர்வதால்தான் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன. இறைவனின் பேராற்றலை, அவரின் பெருங் கருணையை, அவரின் மன்னிப்பை அசைபோடுங்கள். மனது தெள்ளிய நீரோடை.**



**அனாதைகளின் தலையை வருடுங்கள். உங்கள் உள்ளத்தில் இரக்கம் ஊற்றாய் பெருக்கெடுக்கும். ஏழைகளுக்கு, வறியவர்களுக்கு, இயலாதவர்களுக்கு உதவுங்கள். மனது அன்பின் ஊற்று.**

பிடிபடுகின்றது, கொள்கலன்களில் பிடி படுகின்றன. பிடிபடாமல் இன்னும் பல மடங்கு கள்.

எல்லாம் பணமாக்கல்தான். பின்னர் அது பிணமாக்கலில் கொண்டு முடிகின்றது. இவற்றோடு ஒப்பிடுகையில் 'மதுபானம்' மிகச் சாதாரணமானவொரு விடயமாக மாறிவிட்டது போல் தோன்றுகின்றது.

எனவே, பெற்றோரே எச்சரிக்கை! ஆசிரியர்களே எச்சரிக்கை!! சமூகமே எச்சரிக்கை!!!

எமது இளம் சமுதாயம் மட்டில் எச்சரிக்கையாய் இருப்போம். ■

3ம் பக். தொடர்...

காலத்தை ஓட்டுகிறோம் என்றால், இவ்வுலகு, அதன் செல்வம், மக்கள், பந்தம் என நமது பயணப்பாதை கீழ் நோக்கியதாக இருக்கும். ஆன்மாவின் நிலை, மேலுலக சிந்தனைகள் அதிகமாகும்போது உலகு சார்ந்தவற்றை விட்டு படிப்படியாக விலக ஆரம்பிப்போம். உலகில் தான் வாழ்வோம் உலகின்மீது ஈர்ப்பு இருக்காது. பொருள் களைப் பார்ப்போம் வாங்கத் தோன்றாது. சுவையான உணவுப் பொருள்கள் நம் முன்னே இருந்தாலும் உண்ண வேண்டும் என்ற ஈர்ப்பு வராது. இந்தப் பக்குவத்தை புரிந்துகொள்ள மனம் பக்குவப்பட வேண்டும்.

கீழானதை விட்டு விலகாமல், மேலானதை அடைய முடியாது. மேலானதை அடைய விரும்பினால் நமது சொந்தக் குழந்தைகள், நம்மால் வளர்ந்து வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் நம்மைத் திரும்பிப் பார்க்காவிட்டால் கூட நாம் கவலைப்பட மாட்டோம்.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (வள்ளுவர்)

பொருள் மேலுள்ள பற்றை அகற்ற முயலும்போது அருள் மழையால் நிரப்பப்படுவோம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு" (வள்ளுவர்)

மண்ணையும், பொன்னையும் ஒரே விதமாகப் பார்க்கும் மனப் பக்குவம் அடைந்துவிட்டால், அதுவே முடிவில்லாத வாழ்வுக்கான வழி.

மண்ணுக்குள் புதைக்கப்படும் எல்லாம் மக்கி அழிந்து போகும்போது, விதையை மட்டும் மண் உயிர்ப்பிக்கச் செய்வதை இயற்கையின் அதிசயம் என்கிறோம். இறப்ப துடன் முடிவதல்ல மனித வாழ்வு! இறப்புக்குப் பின் அது மகிமையான நிலை வாழ்வாய் மாறுகிறது. இந்த மகிமையான நிலை வாழ்வே மனிதனின் இவ்வுலக வாழ்வை அர்த்தமுள்ளதாகவும், இலக்குடையதாகவும், சுவாரசியமிக்கதாகவும் மாற்றி இயக்கும் சக்தியாக உள்ளது. ஆகவே, "நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்" (கொலோ 3:1).

**உயிர்த்த வாழ்வை இன்றே, இப்போதே வாழத் தொடங்குவோம்.** ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :
திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 08

1) "என் கற்பாறையும் கோட்டையும் நீரே; உமது பெயரின் பொருட்டு எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்" எனும் திருவிவிலிய வசனத்தின் இலக்கங்களைத் தருக:

2) "சாலமோனின் ஞானமிகு தீர்ப்பு" திருவிவிலியத்தின் எப்பகுதியில் உள்ளது?

3) திருவிவிலியத்தில் 12 இடங்களில் பேசப்பட்டுள்ள நபர் யார்?

4) கால்பந்தாட்ட வீரர் குரோஷியத் தலைவர் மாட்ரிச் கைப்பற்றிய விருதின் பெயர் என்ன? இதனையடுத்து இவருக்கு வழங்கப்பட்ட விருது என்ன?

5) இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளின் மூலமும், அடிப்படையுமாக அமைந்த ஏட்டின் பெயர் யாது?

6) திருமலை-மட்டுநகர் மறைமாவட்டத்தின் நிர்வாகப் பகுதியாகச் செயற்பட்டு வந்த மாவட்டங்கள் யாவை? மாகாணம் யாது? மொத்த நிலப்பரப்பு என்ன?

7) திருத்தந்தை 16ம் பெனடிக்ற் எழுதிய "உண்மையில் அன்பு" என்னென்ன காரணங்களுக்காக எழுதப்பட்டது?

8) "நூறாவது ஆண்டு" எப்போது, யாரால், ஏன் வெளியீடு செய்யப்பட்டது?

9) முன்னறிவிப்பு ஏதுமின்றி திருத்தந்தை பிரான்சிஸ் சென்று திருமணத்தை நடத்தி வைத்த தம்பதியினர் யாவர்? எங்கு நடைபெற்றது?

10) "போதைப்பொருள் பயன்பாட்டை ஒழிப்பதற்குத் தண்டனைகள் பெரிதும் பயனளிக்காது" என வியன்னா ஐ.நா. அவைக் கூட்டத்தில் கூறியவரின் பெயர் என்ன? இவர் யார்?

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

அனுப்பவேண்டிய பங்கு : ..................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..................................

முடிவுத் திகதி : 30.11.2018

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 08,**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. இவ்வாறு சவுல் சுற்றிலுமிருந்த எதிரிகள் அனைவருக்கும் எதிராக ........................ தொடுத்தார். அவர் திரும்பிய இடமெல்லாம் அழிவை விளைவித்தார். அமலேக்கியரை முறியடித்து, இஸ்ரயேலை விடுவித்தார். சவுலின் சிற்றப்பா நேரின் மகன் அப்னேர் படைத்தலைவன் ஆனான்.

   அ) போர் ஆ) யுத்தம் இ) சண்டை

2. சவுலின் வாழ்நாள் மழுவதும் பெலிஸ்தியரோடு கடும்போர் நடந்தது. வீரனையும், வலியவனையும் கண்டபோது சவுல் அவர்களைத் தம்மோடு சேர்ப்பதுண்டு. ........................ சவுலிடம் "இப்போது ஆண்டவரின் வார்த்தைகளைக் கேளும்" என்று கூறினார்.

   அ) யோனத்தான் ஆ) அகிமாஸ் இ) சாமுவேல்

3. அவர் மேலும் சவுலிடம் "இஸ்ரயேலர் எகிப்தினின்று வெளிவந்தபோது அமலேக்கியர் அவர்களை வழிமறித்ததற்காகத் தண்டிக்கப்போகிறேன். ஆகவே, அவர்களைத் தாக்கி, உடைமைகளை அழித்தொழியும். ........................ காட்டாமல் அனைத்தையும் கொன்றுவிடும்" என்றார்.

   அ) அன்பு ஆ) இரக்கம் இ) கருணை

4. சவுல் கேனியரிடம் "இஸ்ரயேல் மக்கள் ........................ வருகையில் இரக்கம் காட்டினீர்கள். ஆகவே, அமலேக்கியரிடமிருந்து விலகிச் சென்றுவிடுங்கள். ஏனெனில், அவர்களோடு உங்களையும் நான் அழிக்கவேண்டியிருக்கும்" என்றார். எனவே, கேனியர் விலகிச் சென்றனர்.

   அ) யூதேயாவிலிருந்து ஆ) எகிப்தினின்று இ) பாலைவனத்திலிருந்து

5. பின், சவுல் அவிலா தொடங்கி எகிப்துக்குக் கிழக்கே இருக்கும் சூருக்குச் செல்லும் எல்லைவரை இருந்த அமலேக்கியரைத் தாக்கி மன்னன் ........................ உயிரோடு பிடித்தார். ஆனால், மக்களனைவரையும் வாளுக்கு இரையாக்கினார். வீரர்கள் அனைத்தையும் அழித்தனர்.

   அ) யோனாத்தானை ஆ) அப்னேரை இ) ஆகாகை

6. அப்போது ஆண்டவரின் வார்த்தை சாமுவேலுக்கு அருளப்பட்டது. "சவுலை அரசனாக்கியதற்கு வருந்துகிறேன். ஏனெனில், என்னைப் பின்பற்றாமல் விலகிவிட்டான். என் வார்த்தைகளின்படி நடக்கவில்லை" எனக் கூறவே, சாமுவேல் ........................ இரவெல்லாம் மன்றாடினார்.

   அ) மனம்வருந்தி ஆ) நித்திரையின்றி இ) உணவருந்தாது

7. சவுலைச் சந்திக்க வைகறையில் ........................ எழுந்தபோது, சவுல் கர்மேலில் தமக்கென ஒரு நினைவுச் சின்னம் அமைத்துவிட்டுக் கில்காலுக்குச் சென்றுவிட்டதாக சாமுவேலுக்கு அறிவிக்கப்பட்டது. சாமுவேல் சவுலிடம் வந்தபோது "ஆண்டவரின் வார்த்தையை நிறைவேற்றினேன்" என்றார்.

   அ) படுக்கைவிட்டு ஆ) துயில் இ) நித்திரையிலிருந்து

8. அதற்குச் சாமுவேல் "அப்படியானால் நான் கேட்கும் ஆடுகளின் ஒலியும், மாடுகளின் இரைச்சலும் என்ன?" என்று கேட்டார். சவுல் ........................ இடமிருந்து கொண்டுவரப்பட்டவை. முதல்தரமானவை களை உம் ஆண்டவருக்குப் பலியாக்க வீரர்கள் விட்டுள்ளனர்.

   அ) எகிப்தியர் ஆ) கேனியர் இ) அமலேக்கியர்

9. அப்போது சாமுவேல் சவுலிடம் 'நிறுத்தும், இன்றிரவு ஆண்டவர் கூறியவற்றை உமக்குச் சொல்கிறேன்" என, சவுல் "சொல்லுங்கள்" என்றார். சாமுவேல் "நீர் சிறியவராய் இருந்தபோதல்லவா இஸ்ரயேல் குலங்களுக்கு ........................ ஆனீர்? ஆண்டவரும் உம்மைத் திருப்பொழிவு செய்தார்.

   அ) தலைவர் ஆ) அரசர் இ) மன்னர்

10. ஆண்டவர் உமக்கு வழிகாட்டி, 'நீ சென்று அமலேக்கியரை அழித்துவிட்டு வா, இறுதிவரை போரிட்டு அவர்களை ஒழித்துவிடு' என்றார். நீர் ஏன் ........................ குரலுக்குச் செவி கொடுக்கவில்லை? ஆண்டவரின் பார்வையில் தீயதைச் செய்ததேன்?" என்றார்.

    அ) ஆண்டவரின் ஆ) இறைவனின் இ) கடவுளின்


(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 185

பரிசுப் போட்டி



(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**30.11.2018**

1. பக்தாத் நகரம் அமைந்துள்ள நதியோரம்:
   (தைக்கிரிஸ் - ஸாம்பிஸி - ஓப்)

2. நைல் நதி உருவாகும் ஏரி:
   (தங்கனீக்கா - சுப்பீரியர் -விக்டோரியா)

3. 52வது அகில உலக நற்கருணை மாநாடு 2020ம் வருடம் நடைபெறவுள்ள இடம்:
   (ஆர்ஜென்டினா - புடாபெஸ்ட் - உரோம்)

4. புனித திருத்தந்தை 6ம் பவுல் "இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு" எனும் ஏட்டினை வெளியிட்ட வருடம் :
   (1976 - 1975 - 1974)

5. 'அடங்காத மாட்டுக்கு அரசன் ..............................'
   (மூங்கில்தடி - சாட்டை - பொல்லு)

6. வினையடியுடன் "தல்" எனும் விகுதி இணைவதற்கு உதாரணம்:
   (படையல் - பனுவல் - பாய்தல்)

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................................
பரிசு அனுப்பவேண்டிய பங்கு:
..........................................................

அனுப்பவேண்டிய முகவரி:
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 185
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 183,

பங்கு பற்றியோர் 16 பேர், ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 12 பேர்.

## திருவிவிலியம் கற்போம் – 183 விடைகள்

படைக்கலன்களை, நடுக்கம், கரைந்து, பேழையை, பாளையத்தில், மாபெரும், ஆண்டவர், சவுல், தன்கையை, தெளிவடைந்தன.

## அறிவை வளர்ப்போம் – 183 விடைகள்

1. ஜெர்மனி
2. அம்ஸ்டடாம்
3. ஏழு நாட்கள்
4. ஸ்டீபன் ஹாக்கிங்
5. கல்லார்
6. ஆக்கப்பெயர்

## பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்:

* லோறன்ஸ் மாரிஸ்டெலா,
  இல. 30, கிளாக்கர் வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.

* A. அருள்டினிசாந்,
  5ம் குறுக்கு,
  திருப்பெருந்துறை,
  மட்டக்களப்பு.

* ஜூ.ஜேனுஸ்கா,
  இல. 28, சரவண வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.

* M. சாதனா,
  பிரதான வீதி,
  தம்பிலுவில் - 01.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 135 முடிவுகள்

**1ம் பரிசு - 400/=**

* J. மிதுஷாந்,
  385/1, திருமலை வீதி,
  மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**


* நி. தேஜாஷிவினி,
  04, கதிர்காமர் வீதி,
  அமிர்தகழி,
  மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* எரலி அட்லியா,
  24, காளிகோவில் வீதி,
  பெரிய ஊறணி,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







# மட்டக்களப்பு மறைமாவட்டத்தில்
# புனித யோசவ்வாஸின் திருச்சிலுவை பயணம்


















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org